விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்
Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 50 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 12 செவ்வாய்க்கிழமை (28.08.2012) | பக்கங்கள்: பதினாறு



தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் இரதோற்சவம் இன்று

## பள்ளிவாசல்கள் உடைக்கப்படுவதாக கிழக்கில் பிரசாரம் செய்பவர் அது குறித்து என்னிடம் பேசவில்லை

### கல்முனையில் ஜனாதிபதி

நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை எந்தவொரு பள்ளிவாசலையும் உடைப்பதற்கு அனுமதிக்க மாட்டேன். இது சத்தியம்.

பள்ளிவாசல்கள் உடைக்கப்படுவதாக கிழக்கில் போய்ப் பிரசாரம் செய்கின்றவர் அமைச்சரவையில் அது குறித்து எதுவும் பேசவில்லை. என்னுடனும் மிக அன்பாகவே பேசுகின்றார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கல்முனைகுடி சுனாமி வீட்டுத் திட்ட வெளியரங்கில் நேற்று பகல் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

02

## மகேஸ்வரன் கொலை வழக்கில் குற்றவாளிக்கு மரண தண்டனை


ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தி.மகேஸ்வரன் கொலைச் சம்பத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மகேஸ்வரன் கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான ஜோன்ஸ்ரன் கொலின் வெலன்ரினோ எனப்படும் வசந்தன் என்பவருக்கே மரண தண்டணை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நான்கரை வருடங்களாக இந்த கொலை வழக்கு இடம்பெற்று வந்தது.

தியாகராஜா மகேஸ்வரன் 2008ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கொழும்பில் பொன்னம்பலவானேஸ்வரர் கோவிலில்

02



## ஈழத் தமிழர் நன்மை பெறாமைக்கு வைகோவும் காரணம்

### சாடுகிறார் தி.மு.க.அன்பழகன்

ஈழத் தமிழர்களுக்கு நன்மை செய்யும் அமைதித் திட்டத்தை தடுத்ததில் வைகோவுக்கும் பங்கு உண்டு என்று திருப்பூரில் நடை-பெற்ற டெசோ மாநாட்டு தீர்மான விளக்கக் கூட்டத்தில் திமுக பொதுச் செயலர் க.அன்பழகன் தெரிவித்தார்.

திருப்பூர் டெசோ மாநாட்டு தீர்மான விளக்கக் கூட்டத்தில் அவர் பேசியபோது,

ஈழத் தமிழர்கள் வாழ்வுக்காக டெசோ மாநாடு நடத்தப்பட்டது. இங்குள்ள

02

## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் முதல் நாளே வெளியாகிவிட்டது

### ஆசிரியர் சங்கப் பிரமுகர் குற்றச்சாட்டு: இரத்துச் செய்யவும் கோரிக்கை

நடைபெற்றுமுடிந்த தரம் ஐந்துக்கான புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்யுமாறு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானதால் தாம் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அனுராதபுரம், பொலன்னறுவை,

02

## விசாரணை நடத்துமாறு கல்வி அமைச்சர் பொலிஸாரிடம் கோரிக்கை

பரீட்சை திணைக்களம் நடாத்தும் பரீட்சைகள் மற்றும் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாகவும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருபவர்கள் தொடர்பாகவும் விசாரணைகளை நடத்துமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கோனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகள் நடைபெறுவதற்கு முன்னரேயே வினாத்தாள்கள் வெளியாகியதாக வெளிவந்துள்ள செய்திகளின் அடிப்படையில் பரீட்சைத் திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவும் தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

02

## சீன உதவி தமிழருக்கு வேதனை என்கிறார் சுரேஷ் எம்.பி.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் இராணுவ குடியிருப்புக்களை நிறுவுவதற்கு நூறு மில்லியன் அமெரிக்க டொலரை சீனா உதவியாக வழங்கவுள்ளதாக வெளிவரும் செய்திகள் தமிழ் மக்களுக்கு வேதனை அளிக்கும் நடவடிக்கை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முன்னேஸ்வரம் காளி கோயிலில் திட்டமிட்டபடி மிருக பலி பூஜை

### கோயில் நிர்வாகம் அறிவிப்பு

முன்னேஸ்வரம் ஸ்ரீபத்ரகாளியம்மன் கோவிலின் வருடாந்த மிருக பலி பூஜை திட்டமிட்டபடி வரும் சனிக்கிழமை இடம்பெறும் என அக்கோவிலின் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் அக்கோவிலின் முன்னால் மிருக பலி பூஜைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தியது நிலையிலேயே கோயில் நிர்வாகத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சிலரின் எதிர்ப்புக்களுக்காக எமது சமய விடயங்களை நாம் கைவிடப்போவதில்லை. இவ்வாறான எதிர்ப்புக்களினால் எமது சமய விடயங்களை முன்னெடுப்பதில் எமக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

02

## இலங்கை வருகிறார் சீன பாதுகாப்பு அமைச்சர்

சீன பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங்லி, உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

படையினருக்கான தொழிற்சார் பயிற்சிகள், மற்றும் இலங்கையின் கோரிக்கையின் பேரில் இராணுவ உதவிகளை ஊக்குவித்தல் தொடர்பான கலந்துரையாடல்களில் அவர் பங்குபற்றுவார்.

இவ் விஜயத்தின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலார் கோட்டாபய ராஜபக்ஷ,

02



## வைகோ இன்று உண்ணாவிரதம்

உண்ணாவிரதம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர் செந்தூரனை விடுதலை செய்யக் கோரி இன்று முதல் ம.தி.மு.க தலைமைக் கழக அலுவலகத்தில் தொடர் உண்ணாவிர-தப் போராட்டம் தொடங்கப் போவதாக ம.தி.மு.க பொதுச் செயலா-ளர் வைகோ அறிவித்துள்ளார்.

செந்தூரன் தற்போது சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

02

# சுயநினைவற்ற தமிழ் கைதி சதீஷ்குமாரை உடன் கொழும்புக்கு கொண்டுவாருங்கள் !

**- மனோ கோரிக்கை**

மருத்துவமனையில் சுயநினைவு அற்ற நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அரசியல் கைதி சதீஷ்குமாரை உடனடியாக காலி கராபிட்டிய மருத்துவமனையிலிருந்து கொழும்பு பொது மருத்துவமனைக்கு கொண்டுவர ஆவன செய்யும்படி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவை தான் கோரியுள்ளதாக மக்கள் கண்காணிப்பு குழு அமைப்பாளரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது,

கொழும்பு மகசின் சிறைசாலையிலிருந்து வழக்கு விசாரணைக்காக காலி நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்ட சுந்தரம் சதீஷ்குமார் என்ற தமிழ் அரசியல் கைதி வலது காது பகுதியில் கட்டு போடப்பட்ட நிலையில் தற்போது காலி கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் கீழே விழுந்ததால் இந்த காயம் ஏற்பட்டதாக, நேற்று அவரை சென்று பார்வையிட்ட கைதியின் மனைவியிடம் அதிகாரிகள் தெரிவித்ததாக, கைதியின் மனைவி என்னிடம் தெரிவித்தார்.

கொடிகாமத்தை பிறப்பிடமாக கொண்ட சதீஷ்குமாரின் மனைவி வவுனியாவை சேந்தவர். மக்கள் கண்காணிப்பு குழுவின் உறுப்பினரும், நாடாளுமன்ற உருப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனின் கவனத்திற்கு, கைதியின் மனைவி இது தொடர்பில் தகவல்களை அறிவித்த நிலையிலேயே, இந்த விடயம் எனது கவனத்திற்கு வந்துள்ளது. இது தொடர்பில் மேலதிக தகவல்களை நாம் எதிர்நோக்கி உள்ளோம் என்றார்.

# பனை கைப்பணி பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை

பனை கைப்பணி பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்கல் முகாமையாளர் பா.கோபாலகிருஸ்ணன் திங்கட்கிழமை தெரிவித்தார். திவிநெகும திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்தி சபையினால் மருதங்கேணி, கைதடி, பண்டத் தரிப்பு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 63 பேர் பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர்.

இவர்களில் 44 பேருக்கு வங்கி கடன் வழங்குவதற்கு பனை அபிவிருத்தி சபை பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.அத்துடன், பயிற்சி பெற்றவர் களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறு மதியான உபகரணங்கள் வழங்கு வதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இவர்களுக்கான உபகரணங்கள் அடுத்த மாதம் வழங்கி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# கச்சதீவை மீட்க வேண்டும்: அதிமுக செயற்குழு தீர்மானம்

சர்ச்சைக்குரிய கச்சைதீவை இந்திய அரசு மீட்டு தனதுடமையாக்க வேண்டுமென அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அதிமுக) செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதிமுக செயற்குழு கூட்டம் நேற்று சென்னையிலுள்ள கட்சி தலைமையகத்தில் கூடியது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் தலைமையில் நடந்த இக் கூட்டத்திலேயே மேற்படி தீர் மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# சிரியப் படுகொலையின் கோரங்கள்



சிரியாவில் மோதல்கள் உக்கிரமடைந்துவரும் சந்தர்ப்பத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட சுமார் 300 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிரிய அரசாங்கப் படையினராலேயே இவர்கள் படுகொலை செய்யப்பட் டுள்ளதாகவும், கொல்லப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவதாக சிரியப் போரா ளிகள் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் அதிகமானோர் இளைஞர்கள் ஆவர். மேலும் சிறுவர்கள் பலர் தலையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்நாட்டு மக்கள் தொடர்ச்சியாக அண்டை நாடுகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

## விசாரணை நடத்துமாறு....(தொடர்)

இதற்கு மேலதிகமாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினூடாகவும் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என். ஜே. புஷ்பகுமார கேட்டுக்கொண்டுள்ளார்.

பரீட்சை திணைக்களம் கடந்த காலங்களில் நடத்திய பரீட்சைகள் மற்றும் வெளியிட்ட பெறுபேறுகள் தொடர்பாக குறைபாடுகள் இருப்பதாக சுட்டிக்காட்டி நாட்டின் கல்வித்துறை தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை உருவாக்கும் பாரிய சூழ்ச்சியொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு அமைச்சர் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுள்ளார்.

கடந்த சில காலங்களாக ஜே[illegible] கப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மட்டுமல்ல சில தகவல்களையும் வழங்கி மக்களையும் ஊடகங்களையும் தவறாக வழிநடத்த ஆசிரியர் சங்கங்களின் சிலர் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாகவும் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

## வைகோ இன்று....(தொடர்)

நேற்று அங்கு சென்ற வைகோ, செந்தூரனை சந்தித்து உடல் நலம் விசாரித்தார். பின்னர் செய்தியா-ளர்களிடம் அவர் பேசுகையில்,

செந்தூரனின் நியாயமான கோரிக்கையை அரசு ஏற்க வேண்டும். அவரது உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவரது உயிருக்கு ஊறு நேர்ந்தால் தமிழகம் அரசும் காவல்துறையும் தான் முழுப்பொறுப்பு. உடனடியாக அவரையும், சிறப்பு முகாம்களில் அடைபட்டு கிடக்கும் 47 இலங்கைத் தமிழர்களையும் விடுதலை செய்யவேண்டும்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி இன்று ம.தி.மு.க தலைமை அலுவலகமான தாயகம் முன்பு நான் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுகிறேன். இதைத் திராவிடர் விடுதலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடங்கி வைக்கிறார்.

மாலையில் பழ.நெடுமாறன் முடித்து வைக்கிறார். 28ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதம் நடைபெறும். எங்களது கோரிக்கைகள், செந்தூரனின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தொடரும். பொதுமக்களுக்கு எந்த தொல்லையும் தராமல், அகிம்சை வழியில் இதை நாங்கள் நடத்துவோம் என்றார் வைகோ.

## இலங்கை வருகிறார்....(தொடர்)

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகியோரை அவர் சந்தித்து கலந்துரையாடுவார்.

இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய கடந்த வருடம் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததைத் தொடர்ந்து சீன பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வரவுள்ளார். அவருடன் சீன மக்கள் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பலரும் விஜயம் செய்யவுள்ளனர்.

பாதுகாப்பு சேவைகள் கல்லூரிக்கு சீன பாதுகாப்பு அமைச்சர் விஜயம் செய்யும்போது, 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியையும் அவர் வழங்கவுள்ளார். சப்புகஸ்கந்த பாதுகா[illegible] கல்லூரி, பனாகொட இராணுவ முகாம் ஆகியவற்றுக்கும் அவர் செல்லவுள்ளார்.

## மகேஸ்வரன் கொலை... (தொடர்)

வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் போது துப்பாக்கிதாரி ஒருவரினால் சுடப் பட்டு வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இதற்கு முன்னதாக 2004ஆம் ஆண்டு கொழும்பில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது இவர்மீது நடத்தப்பட்ட கொலைத்தாக்குதலில் காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்.

யாழ்ப்பாணம், காரைநகரில் பிறந்த இவர் பெரும்பான்மை சிங்களவர்கள் உள்ள அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்திருந்திருந்தார்.

## முன்னேஸ்வரம் காளி கோயிலில்....(தொடர்)

எமது இந்த சமய பணியை தடையின்றி முன்னெடுப்பதற்கு வசதி செய்து தருமாறு நாம் ஜனாதிபதி உட்பட பாதுகாப்புச் செயலாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். எமது இந்த நடவடிக்கைக்கு ஆதரவாக கருத்துக்களை தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஓரிருவரைத் தவிர ஏனைய அனைவரும் வெளியிலிருந்து வந்தே ஈடுபட்டனர். அவர்கள் இனவாதக் கோஷங்களை எழுப்பினர்.

எவ்வா றாயினும் நாம் சட்டப்படியே இந்த நடவடிக்கையில் ஈடுபட வுள்ளோம் என நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர்.

## பள்ளிவாசல்கள் உடைக்க.....(தொடர்)

ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றும்போது தெரிவித்ததாவது,

நான் சிங்களவர்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டு மக்கள் அனைவருக்குமான ஜனாதிபதியாவேன். முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவ, பௌத்தர் என்ற வேறுபாடு காட்டி நான் ஆட்சி செய்ய முடியாது. எல்லா மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும் நான் மதிப்பளிக்கின்றேன்.

விகாரைகளை யும் பள்ளிவாசல்களையும் கோவில் களையும் பாதுகாப்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தேர்தலில் உங்கள் வாக்குகளை பெறுவதற்காக பள்ளிவாசல்கள் உடைக்கப்படுவதாக இங்கு இனவாத பிரசாரம் செய்யப்படுகிறது. பள்ளிவாயல்கள் உடைக்கப்பட்டதென்று இங்கு பிரசாரம் செய்பவர் என்னிடமோ அமைச்சரவையிலோ இதுவரை முறையிடவில்லை. அவர் என்னுடன் மிகவும் அன்பாகவே பேசுகின்றார். இது என்ன நியாயம்? எனவே மக்களை ஏமாற்ற வேண்டாம். மக்களும் ஏமாற வேண்டாம்.

மக்களுக்கு மத்தியில் விசமப் பிரச்சாரங்களை மேற்கொண்டு எம்மை மக்களின் எதிரிகளாக்குகின்ற விடயத்தை சிலர் செய்து வருகிறார்கள். இதற்கு ஒருபோதும் நான் இடமளிக்க மாட்டேன். இனவாதம் பேசி என்ன பலம். அதுதான் அரசியல் இலாபம். அதற்காகவே இன்று இனவாத பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் என்றும் ஏமாளிகளாக வாழ மாட்டார்கள் என்று நான் நம்புகின்றேன் என்றும் கூறினார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது நான் இங்கு வந்தபோது நீங்கள் யுத்தத்தை ஒழித்து பயங்கரவாதத்தில் இருந்து உங்களை மீட்குமாறு கோரிக்கை விடுத்தீர்கள.

வடக்கு கிழக்கை பிரித்து தனியான மாகாண சபையை ஏற்படுத்துமாறு அமைச்சர் வேண்டுகோள்விடுத்திருந்தார்.அந்த இரண்டையும் நான் நிறை வேற்றியுள்ளேன்.

ஆகையினால் நீங்கள் என்னை முழுமையாக நம்புங்கள். நான் உங்களுக்கு வேண்டிய அத்தனையும் செய்து தருவேன்.

என்னு டன் நம்பிக்கையாக இணைந்து சேவையாற்றக் கூடியவர்களை உங்கள் பிரதிநிதிக-ளாக தெரிவு செய்யுங்கள்.

அதுவே இந்த மண்ணுக்கும் உங்களுக்கும் நல்லது.

அதன் மூலம் எனக்கும் உங்களுக்கு சேவை செய்ய இலகுவாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

## புலமைப்பரிசில் பரீட்சை...(தொடர்)

கம்பஹா, களனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பரீட்சை நடைபெறுவதற்கு முதல்நாளான 25 ஆம் திகதியே வினாத்தாள்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக முழுமையான விசாரணைகள் செய்யப்பட வேண்டும். வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானதால் பரீட்சையை இரத்துச் செய்யுமாறு நாம் வேண்டுகோள் விடுக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈழத் தமிழர் நன்மை....(தொடர்)

தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் தொப்புள்கொடி உறவு உள்ளது.

ஈழத் தமிழர் போராட்டக் குழுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டு, சகோதர யுத்தத்தில் ஈடுபடாதீர்கள் என கருணாநிதி கூறினார். ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது அமைதி வழியில் தீர்வு காண முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த சமயத்தில் சென்னையில் ஈழப் போராட்டக் குழுத் தலைவரை பிரபாகரன் இயக்கத்தினர் சுட்டுக் கொன்றனர்.

இதன் விளைவாக ஈழத் தமிழருக்கான பயன்தரும் அமைதித் திட்டம் தடுமாறிப் போனது. மேலும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வைகோ கள்ளத்தோணி மூலமாகச் சென்று பிரபாகரனை சந்தித்தார்.

ராஜீவ் காந்தியால் கொண்டு வரப்பட்ட ஈழத் தமிழர்களுக்கான அந்த அமைதித் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு வைகோவுக்கும் பங்கு உண்டு. இப்போது, டெசோ மாநாடு எதற்கு எனக் கேட்கின்றனர்.

# தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கள்ளச் சந்தையில்?

## குற்றத்தடுப்புப் பிரிவு விசாரணை

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாக வெளியிடப்பட்டதாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடரபில் விசாரணைகளை குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொள்ளவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம். புஸ்பகுமார தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டிற்கான புலைமைப்பரிசில் பரீட்சை நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது.

இந்த பரீட்சைக்கு முன்னதாகவே பரீட்சை தாள்கள் வெளியிடப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்கம் குற்றஞ்சுமத்தியிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் குற்றத் தடுப்பு பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

எப்படியிருப்பினும் வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாக வெளியிடப்பட்டமை குறித்து இதுவரையிலும் தனக்கு எழுத்து மூலமான முறைப்பாடுகள் எனவும் கிடைக்கப்பெறவில்லை என புஸ்பகுமார மேலும் குறிப்பிட்டார்.

## அவுஸ்திரேலியப் பயணம்:

# இரண்டு நாட்களில் 76 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 76 பேர் இரண்டு நாட்களில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினமும், அதற்கு முதல் நாளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரஸ்சித் புத்தா என்ற படகில் 24 பேர் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளனர். இவர்களில் 12 தமிழர்களும் 12 முஸ்லிம்களும் அடங்குகின்றனர். சடேவ் புத்தா என்ற படகில் 52 பேர் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மூதூர், அம்பாறை, மட்டக்களப்பு, கிண்ணியா, மருதங்கேணி, சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நுரைச்சோலையில் கோளாறுகளை திருத்தும் பணிகள்

நுரைச்சோலை அனல் மின் நிலைய கோளாறு திருத்தும் பணிகள் தற்போதும் தொடர்வதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலைய கோளாறு திருத்தும் பணிகள் நேற்றுமுன்தினம் (26) ஆரம்பமாகயிருந்தன.

எனினும் இதுவரையில் திருத்தப்பணிகள் நிறைவடையவில்லை என மின்சார சபை தெரிவிக்கி

இதன் காரணமாக தற்போது நடைமுறையில் உள்ள கட்டம் கட்டமான மின்சாரத் துண்டிப்பு தொடரும் எனவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்குப் பிணை





மன்னார் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரான அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இக் குற்றச்சாட்டு தொடர்பில் அமைச்சரை நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்றம் கடந்த 13 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைய அமைச்சர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜரான வேளை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபா இரு சரீர பிணையிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு மீதான அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# மக்களுக்கு பிரச்சினைகள் வரும் போது ஓடி ஒழிபவர்கள் தேர்தலுக்காக வீராப்பு

## திகாம்பரம் எம்.பி

மலையகத்தில் பிந்துனுவெள பிரச்சினையின் போது மலையகத்தில் சில அரசியல்வாதிகள் மக்களைத் தூண்டி விட்டு வேடிக்கைப் பார்த்தவர்கள் இன்று சம்பரகமுவ மாகாணசபைத் தேர்தலின் போது தோட்டப் பகுதிகளுக்குச் சென்று வீராப்பு பேசுவதானது வேடிக்கையாக உள்ளதென்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம் தெரிவித்தார்.

அம்பகமுவ மற்றும் கொட்டகலை பிரதேச தலைவர்களுக்காக ஹட்டன் - டிக்கோயா நகர-சபை மண்டபத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பிந்துனுவெள சம்பத்தின் போது போராட்டம் நடத்திய மலையகத் தமிழ் இளைஞர்கள் இன்னும் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். தேர்தல் காலத்தில் மாத்திரம் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் பேசுகின்றவர்கள். வன்செயல்கள் ஏற்படுகின்ற போது நாட்டை விட்டு ஓடிவிடுவார்கள். அதனால் இறுதியில் பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள் தான். இதனை மலையகத்தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மலையகத்தில் தொழிற்சங்கங்களுக்கு அங்கத்துவம் சேர்க்கும் காலத்தில் மாத்திரம் அடிக்கல் நாட்டுவதும் தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களை அரவணைப்பது போல பாசாங்கு காட்டுவதும் வழமையாகி விட்டது. இதனை உணர்ந்து மலையகத் தமிழ் மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும். எனவே மலையகத்தில் என்றும் சேவையாற்றுகின்றவர்களுக்கு மாத்திரமே தொழிற்சங்க அரசியற் பலம் நிலைத்திருக்கும் என்றார்.

# ஆயுர்வேத அபிவிருத்திக்கான கலந்துரையாடல் வவுனியாவில்

நாவின்னை மஹரகம என்ற இடத்தில் உள்ள உள்நாட்டு மருத்துவத் துறைக்கான தேசிய ஆயுர்வேத திணைக்களம் பாரம்பரிய சித்த ஆயுள்வேத வைத்தியத்தின் வைத்திய முறைகளை அபிவிருத்தி செய்வதற்கும், இந்த வைத்திய முறைகளை பேணிப் பாதுகாத்து அத்துறையில் காலம் காலமாக ஈடுபட்டு அந்த வைத்திய முறைகளை இன்றும் தொடர்ந்தும் செயற்படுத்தி வருகின்றன பாரம்பரிய மருத்துவர்களை கௌரவிக்கும் முகமாகவும் அவர்களினது செயற்திறன் முறைகளை எதிர்காலங்களில் வருகின்ற சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் ஏனைய வைத்தியர்களுக்கும் அறிந்து கொள்ள செயற்வதற்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை முதல் 23 ஆம் திகதி வியாழக்கிழமை வரையிலான இரண்டு நாட்களுக்கு வவுனியாவில் உள்ள பிராந்திய சுகாதார அத்தியட்சகர்களினது காரியாலயத்தில் நடத்தியது.

இதில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல்துறை சார்ந்த அறுபதுக்கும் மேற்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் பங்குபற்றி தங்களினது வைத்திய முறைகள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றினைப் பகிர்ந்து கொண்டனர்.

# 14 வயது சிறுவன் தூக்கிட்டுத் தற்கொலை

வட்டவளை மஹூன்ஜீத் தோட்டத்தில் 14 வயதுச் சிறுவன் ஒருவன் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சிறுவன் கடந்த 25ஆம் திகதி இரவு தற்கொலை செய்து கொண்டுள்ளான்.

தனது வீட்டின் சமையலறையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவன் தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

# தந்தையும் 5 வயது மகளும் துப்பாக்கிச் சூட்டில் பலி!

மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தை மற்றும் அவரது 5 வயதுச் சிறுமி இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு மொனராஹகேன, மீபே வீதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்களில் கணவன் மனைவி மற்றும் அவர்களது மகள் மூவரும் சென்ற வேளையில் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் சடலம் ஹோரணை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# உற்சவகால சொற்பொழிவு

கந்தர்மடம் மணல்தறை அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 108 சங்காபிஷேகப் பெருவிழாவுடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ள ஆலய உற்சவ காலத்தின்போது தினமும் மாலை 6.00 மணி முதல் மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன் நிகழ்த்தும் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

(க)

# இன்றைய இராசி பலன் (28.08.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 12 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : பூராடம் காலை 8.02 வரை, அதன் பின் உத்தராடம்
**திதி** : துவாதசி இரவு 11.05 வரை, அதன் பின் திரயோதசி
**சுபநேரம்** : 10.35 - 12.05 **இராகுகாலம்** : 3.05 - 4.35
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)
**மேடம்** : தொழில் மந்த நிலை, கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, மனக்கஷ்டம்
**இடபம்** : பொருட் சேர்க்கை, பூமி இலாபம், தந்தை வழி உதவி
**மதுனம்** : ஆரோக்கியக் கேடு, வீண் மனஸ்தாபம், வருவாய் குறைவு
**கடகம்** : மனமகிழ்ச்சி, நண்பர் உதவி, இல்ல சுகம்
**சிங்கம்** : கடன் பிரச்சினை, வழக்கு விவகாரம், எதிரிகள் தொல்லை
**கன்னி** : பொருட்சேர்க்கை, புத்திரரால் நன்மை, பணப்புழக்கம்
**துலாம்** : இருப்பிடமாற்றம், வாகனச் செலவு, தாயார் உடல்நலக் குறைவு
**விருச்சிகம்** : காரியத்தடை, வீண்முயற்சி, சகோதர சஞ்சலம்
**தனுசு** : பொருள் வரவு, வாக்குச் சித்தி, குடும்ப சுகம்
**மகரம்** : யோசனை மிகுதி, கபாலரோகம், போசன சுகக்குறைவு
**கும்பம்** : அதிக செலவு, பிரயாணக் கஷ்டம், சயன சுகக்குறைவு
**மீனம்** : பொருள் இலாபம், உல்லாசப் பிரயாணம், மூத்தோர் உதவி

- **ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# முஸ்லிம்களை 'மரக்கல' என்று சிங்கள மக்கள் அழைப்பது ஏன்?

- பிரதி கல்வியமைச்சர் விளக்கினார்

"ஒரு முறை இந்நாட்டை ஆண்ட மன்னரொருவர் ஆக்கிரமிப்பாளர்கள் படுகொலை செய்வதற்காகத் துரத்திச் சென்றனர். அவர் ஓடிச் சென்று "பங்கா கம்மான" என்று கிராமத்தில் ஒளிந்துள்ளார். துரத்தி வந்தவர்கள் இடைவழியில் முஸ்லிம் பெண்மணியொருவரைக் கண்டதும் மன்னர் ஓடிவந்தது தொடர்பாக ஒருவர் விசாரித்துள்ளார். அப்பெண்மணி மன்னரைக் காட்டிக் கொடுக்கவில்லை. அதனால் அப்பெண மணியை ஆக்கிரமிப்பாளர்கள் படுகொலை செய்துவிட்டுத் திரும்பிவிட்டனர். ஒளிந்த மன்னர் வெளியே வந்து பார்த்தபோது குறித்த பெண்மணி இரத்த வெள்ளத்தில் மிதந்ததைக் கண்டதும் மாரெக்கலே (என்னைப் பாதுகாத்த இரத்தம்) என வாய்விட்டு அழுதார். இதுவே "மரக்கல" என மறுவியுள்ளது" என்றார் பிரதியமைச்சர் விஜயமுனி சொய்ஸா.

பொலநறுவை மாவட்ட முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்கவென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொலநறுவை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்களும், கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொண்ட கூட்டத்தில் பிரதி கல்வியமைச்சர் விஜித விஜயமுனி சொய்ஸா கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், உங்களுக்கும் (முஸ்லிம்கள்) எங்களுக்கும் (சிங்களவர்) இடையே மிக நெருக்கமாக உறவு உள்ளது. உங்களது ஆரம்பகால மூதாதையர்கள் வியாபாரத்திற்காக இங்கு வந்து அவர்கள் அங்குள்ள பெண்களைத் திருமணம் முடித்து வாழ்ந்திருக்கிறார்கள். அதனடிப்படையில், உங்களுக்கும், எங்களுக்கும் தாய்வழி உறவு இருக்கின்றது எனக் கூறலாம்.

இனவாதம் மீண்டும் மெதுவாகத் தலைதூக்கத் தொடங்கியுள்ளது. இனவாதம் அடிப்படைவாதமாக மாறும். அது பயங்கரவாதமாக வளர்ச்சி அடையும். பயங்கரவாதத்தினால் எமது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் நாட்டில் மீண்டும்



இனவாதம் தலைதூக்க இடமளிக்க வேண்டாமென கடவுளின் பெயரால் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

எம்மையும், உங்களையும் மொழியே தூரப்படுத்தியுள்ளது. கண்டி ஒப்பந்தம் தமிழ் மொழியில் செய்யப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மொழி சர்வதேச தரத்தில் இருந்தது. அதனால் நீங்கள் தமிழ் மொழியைப் பேசுகின்றீர்கள்.

உங்களது தனியான மத விழுமியங்களையும், கலாசாரத்தையும், தனித்துவ அடையாளங்க ளையும் நாம் மதிக்கின்றோம். நாம் முஸ்லிம்களை கௌரவமான பிரஜைகளாகவே பார்க்கின்றோம் என்றும் பிரதியமைச்சர் கூறினார்.

# சண்டிலிப்பாயில் முன்பள்ளிகளுக்கு ஆசிரியர்களாக விண்ணப்பிக்கலாம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளிகளில் காணப்படும் முன்பள்ளி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை வலிகாம வலய கல்வித் திணைக்களம் கோரியுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தரமானது க.பொ.த.சாதாரணம் தரம், முன்பள்ளி டிப்ளோமா என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளமையால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் கணிதம் உட்பட மூன்று பாடங்களில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.

இத் தகமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் தமது சுய விபரக் கோவையினை எதிர்வரும் முதலாம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்ப பிள்ளை கல்வி அபிவிருத்திப் பிரவு, வலயக் கல்விப் பணிமனை, மருதனார்மடம்" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார்.

# அநாதரவான பெண்களின் விபரங்கள் திரட்டப்படுகிறது

(சண்டிலிப்பாய்)

கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் விபரங்களை சமூக சேவைகள் திணைக்களம் திரட்டி வருகின்றது.

பல்வேறு காரணங்களினால் கணவனை விட்டுப் பிரிந்து வாழும் பெண்கள் தொடர்பான முழுமையான விபரங்கள் கிராம அலுவலர்களூடாக திரட்டப்பட்டு வருகின்றது.

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# ஏழாலை தெற்கில் தையல் பயிற்சி

(உடுவில்)

ஏழாலை ஸ்ரீ முருகன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் தையல் பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏழாலை தெற்கு பகுதியில் வாழும் தொழில் வாய்ப்பற்ற யுவதிகளுக்கு, தொழிற் பயிற்சியினை வழங்கு முகமாக இத் தையல் பயிற்சி நடாத்தப் படவுள்ளது.

இப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் பெண்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# விதவைப் பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றவருக்கு பதுளையில் பிளேட் வெட்டு

(பதுளை)

தனிமையிலிருந்த விதவைப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றவரின் மர்ம உறுப்பை அப்பெண் பிளேட்டினால் கீறியதையடுத்து அந்நபர் இரத்தம் வடிய வடிய தப்பியோடிய சம்பவம் ஊவா பான-கமையில் இடம்பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

இது குறித்து அப்பெண் ஊவா பரணகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினை செய்துள்ளார். இம்முறைப்பாட்டினையடுத்து கைது செய்யப்பட்ட நபர் பொலிசாரின் பாதுகாப்புடன் வெலிமட அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சிகிச்சை பெற்று வரும் நபர் ஓய்வு பெற்ற இ.போ.ச. பஸ் நடத்துநர் என்பது தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கழுகுக் கண்கள்

நாட்டில் இளம் சந்ததியினர் மத்தியில் ஒழுக்கம் சீர்குலைந்திருப்பதுபற்றி வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நான், சொற்ப நேரம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் உள்ள உயர்ந்த மரத்தில் அமர்ந்து களைப்பாற தீர்மானித்த போது அங்கு சாரணர்களின் ஜம்போரி நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து குதூகலித்தேன்.

சாரணர் இயக்கங்கள் மூலம் இளம் சந்ததியினரை நல்வழிப்படுத்த முடியும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

பிரிட்டிஷ் இராணுவத்தில் லெப்டினன்ட் ஜெனரல் என்ற உயர் பதவியை வகித்து வந்த பேடன் பவல் பிரபு, உலகின் விடலைப் பருவத்தைச் சேர்ந்த ஆண் பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதற்காகவும், ஒரு நாட்டுக்காக நாட்டுப் பற்றுடனும், கடமை உணர்வுடனும் செயற்படுத்துவதற்கு அவர்களுக்கு வாய்ப்பை அளிப்பதற்காக சாரணர் இயக்கத்தை ஏற்படுத்தினார். இவரே உலக சாரணர் இயக்கத்தின் ஸ்தாபக, பிரதம சாரணராகவும் விளங்கினார்.

பேடன் பவல் பிரபு 1857ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதியன்று பிறந்தார். இவர் தனது கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேர்ந்து 1876ஆம் ஆண்டு முதல் 1910ஆம் ஆண்டு வரையில் இந்தியாவிலும், ஆபிரிக்க கண்டத்திலும் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியாக கடமையாற்றினார்.

1899ஆம் ஆண்டில் போயர் யுத்தத்தில் தென்னாபிரிக்காவின் ஒரு நகரத்தை எதிரிகளிடமிருந்து பாதுகாத்த பேடன் பவல் ஒரு சிறந்த எழுத்தாளருமாவார். சிறுவர்களை நாட்டை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்துவதற்காக இவர் பல நூல்களை எழுதி, இறுதியில் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தார். 1907ஆம் ஆண்டில் இவர் முதலாவது சாரணர் முகாமை ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது வழிகாட்டலின் கீழ் உலகெங்கிலும் உள்ள விடலைப் பருவத்தைச் சேர்ந்த ஆண் பிள்ளைகள் சாரணர் அமைப்புகளையும், பெண்கள், புசைட புரளைநள என்ற அமைப்புகளை ஏற்படுத்தினார்கள். யுத்த காலத்தில் இவ்விரு இயக்கங்களும் தங்கள் இராணுவங்களுக்கு தேசப்பற்றுடன் இரகசியத் தகவல்களை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுதல், காயமடைந்த போர் வீரர்களை பாதுகாப்பான இடத்திற்கு தூக்கிச் செல்லுதல் போன்ற பணிகளை நிறைவேற்றினார்கள்.

சாரணர் இயக்கம் பற்றி பேடன் பவல் எழுதிய நூல் 150 மில்லியன் பிரதிகளை விற்று சாதனையை ஏற்படுத்தியது. 20ஆம் நூற்றாண்டில் ஆகக்கூடிய நூல்கள் விற்பனை, என்ற சாதனையை இது ஏற்படுத்தியது. 1920ஆம் ஆண்டில் பேடன் பவல் பிரபு உலகின் முதலாவது சாரணர் ஜம்போரியை ஒலிம்பியாவில் வெற்றிகரமாக நடத்தினார். அதையடுத்து 1929ஆம் ஆண்டு மூன்றாவது உலக சாரணர் ஜம்போரியையும் நடத்தினார்.

பேடன் பவல் பிரபுவின் பெரு முயற்சியினால் 1922ஆம் ஆண்டளவில் உலகிலுள்ள 32 நாடுகளில் 10 லட்சத்திற்கும் கூடுதலான சாரணர்கள் இருந்தார்கள். 1939ஆம் ஆண்டில் சாரணர்களின் எண்ணிக்கை 33 லட்சமாக அதிகரித்தது. இலங்கையிலும் இந்தக் காலகட்டத்தில் கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் உள்ள முன்னணி பாடசாலைகளில் சாரணர் மற்றும் சாரணியர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தத் தடவை 49ஆவது சாரணர் ஜம்போரி கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இம்மாதம் 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதில் 2000இற்கும் மேற்பட்ட சாரண சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள். சாரண சிறுவர்களை மற்றவர்களின் உதவியின்றி வாழ்ந்து, தேசத்திற்கும் தங்கள் சமூகத்திற்கும் பணிபுரிய வேண்டுமென்ற உன்னத நோக்கத்துடன் இந்த இயக்கத்தில் சேர்ந்து கொண்டு, தன்னலமற்ற சேவையை சமூகத்திற்கு செய்து வருகிறார்கள். இவர்கள் ஜம்போரிகளில் கலந்து கொள்ளும் போது தங்களுக்கு தேவையான உணவை தாங்களே சமைத்துக் கொள்வதற்கும் மிருகங்களின் துன்புறுத்தல் இன்றி இரவில் தனியாகவும் பாதுகாப்பாகவும் நித்திரை செய்யும் அளவுக்கு மன தைரியத்தை கொண்டுள்ளார்கள்.

இலங்கையில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது போன்று சாரணர் அமைப்புகள் இப்போது பிரபல்யம் பெற்று விளங்கவில்லை. சாரணர் அமைப்புகளின் கவனக்குறைவும், அவற்றை வழிநடத்தும் முக்கியஸ்தர்களின் பொறுப்பற்ற தன்மையும் சாரணர் அமைப்புகளின் வளர்ச்சிக்கு உதவவில்லை என்பதை நாம் குறிப்பிட்டே ஆக வேண்டும். ஆயினும் இலங்கையில் உள்ள சில சிறந்த சாரணர் அமைப்புகள் தேசப்பற்றுடன் நல்ல பல பணிகளை நிறைவேற்றி வருவதையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

சாரணர் இயக்கம் இலங்கையில் வலுப்பெற்று ஒவ்வொரு பாடசாலையிலும் குறைந்தபட்சம் 50 அல்லது 100 உறுப்பினர்களையாவது கொண்டிருந்தால் நிச்சயமாக அது ஒழுக்கமான எதிர்கால பிரஜைகளை உருவாக்குவதற்கு உதவியாக அமைந்திருக்கும்.

சாரணர் அமைப்புகள் கடந்த 50 ஆண்டு காலமாக இலங்கையில் வலுப்பெற்று விளங்கியிருந்தால் நிச்சயம் எல்.ரி.ரி.ஈ.பயங்கரவாத இயக்கத்திலும், ஜே.வி.பியின் அரச எதிர்ப்பு வன்முறைகளிலும் எமது நாட்டின் தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்கள் பெருமளவில் சேர்ந்து தங்களுக்கும் நாட்டுக்கும் தீங்கை இழைத்திருக்க மாட்டார்கள்.

வலுவான சாரணர் இயக்கமொன்று எங்கள் நாட்டில் கடந்த காலத்தில் இருந்திருந்தால் யுத்தம் மற்றும் வன்முறைகளினால் எங்கள் நாடு கடந்த 30 ஆண்டு காலமாக அழிவை எதிர்நோக்கியிருக்க முடியாது. எனவே, இனிமேலாவது எங்கள் நாட்டின் கல்வித்துறைக்கு பொறுப்பானவர்கள் சாரணர் இயக்கத்திற்கும் சாரணியர் இயக்கத்திற்கும் புத்துயிர் அளித்து அவற்றை மறுமலர்ச்சி அடையச் செய்வதற்கு இந்தக் கழுகுக் கண்கள் தனது பூரண பங்களிப்பை வழங்கும்.

# முஸ்லிம்களுக்கும் ஏற்புடைய அரசியல் தீர்வே தமிழ் மக்களுக்கும் வேண்டும்

**-இரா. சம்பந்தன்**

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்து வரும் உறுதியான நிலைப் பாட்டைக் கொண்டிருக கின்றது" என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவரும் திருகோண மலை மாவட்டத்தின் நாடாளு மன்ற உறுப்பினருமான இரா.சம் பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை, பெரியகுளம் என்னுமிடத்தில் கடந்த சனிக் கிழமை மாலை நடைபெற்ற கூட்ட மைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையுடன் நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே நெருங்கிய உறவு இருக்க வேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைக்க நாம் தயாராக இருக்கின்றோம். தாராளமாக விட்டுக்கொடுத்து செயல்படு வதற்கு நாம் தயாராகவும் உள்ளோம் என்றும் தெரிவித்தார்.

# திருகோணமலையில் மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் போராட்டம்

தடைசெய்யப்பட்டுள்ள பகுதிகளில் மீன் பிடிக்க முடியாமையின் காரணமாக தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து திருகோணமலை மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் 300 தொடகம் 400 வரையிலான மீனவர்கள் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவிகப்படுகிறது. குறிப்பிட்ட சில பகுதிகளில் மீன் பிடித்தலுக்கு தடை விதிக் கப்பட்டுள்ளதன் காரணமாக மீன்பிடித்தலில் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மீன்பிடித் துறை அமைச்சிற்கு தகவல் வழங்கப்பட்ட போதும் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என அவர்கள் குற்றுஞ்சுமத்துகின்றனர்.

தமது எதிர்ப்பை கடுமையாக முன்வைக்கும் முகமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

# கடலில் மூழ்கி இளைஞர் மரணம்

களுகங்கை கடலில் கலக்கும் இடத்திற்கு அருகில் உள்ள கலிடோ கடலில் குளித்துக கொண்டிருந்தபோது நீரில் மூழ்கிய ஐந்து இளைஞர்கள் பிரதேசவாசிகளினால் காப்பாற்றப் பட்டுள்ளனர்.

இவர்களின் ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஏனையோர் ஆபத்தான நிலையில் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


பண்டாரகம, கெலனிகம பகுதியச் விதானகே அசேன் சாலித என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப பட்டுள்ளனர்.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய அலுவலகம் காங்கேசன்துறை வீதியில்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய அலுவலகம் யாழ். காங்கேசந்துறை வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ். ஸ்ரான்லி வீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகம் இயங்கிவந்தது.

இந்நிலையில் புதிய அலுவலகம் மத அனுஷ்டானங் களுடன் இந்த அலுவலகம் திறந்துவைக் கப்பட்டதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி மறைந்த தலைவர்களின் திருவுருவப்படங்களுக்கு மலர் மாலை இடப்பட டார்.






# மட்டக்களப்பில் ஐ.ம.சு.மு வேட்பாளர் வீட்டில் கொள்ளை

**- துப்பாக்கி முனையில் சம்பவம்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளருமான எட்வின் கிருஷ்ணாணந்தராஜாவின் (பிரதீப் மாஸ்ரர்) வீட்டில் ஆயுத முனையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகல் கொளளையிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, வைத்தியசாலை வீதி 3ஆம் குறுக்கில் உள்ள இவ ரது வீட்டிலேயே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

இவரது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் குழந்தை மற்றும் பிரதீப் மாஸ்ரரின் சகோதரியின் மீது கைத்துப்பாக்கிகளை வைத்து அச்சுறுத்தி தங்கநகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் சகோதரியின் தாலிக்கொடி, குழந்தையின் சங்கிலி உள்ளிட்ட 25 பவுண் தங்கநகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என பொலி ஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பிரதீப் மாஸ்ரர் தெரிவிக்கையில்,

"நாங்கள் தேர்தல் பிரசார வேலைகளுக்காக வந்தாறுமூலை பிரதேசத்திற்குச் சென்றிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் எனது வீட்டுக்கு வந்த சிலர் எங்களை விசாரித்துவிட்டு தண்ணீர் கேட்டுள்ளனர்.

அப்போது வீட்டுக் கதவைத் திறந்து தண்ணீர் கொடுக்க முற்பட்ட வேளையில் வீட்டுக்குள் நுழைந்த இவர்கள், எனது மகளின் தலையில் துப்பாக்கியை வைத்து நகைகளைக் களற்றித் தருமாறு அச்சுறுத்தி நகைகளைப் பெற்றுள்ளனர்.

பின்னர் எனது சகோதரியின் தலையிலும் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தி அவரின் தாலிக்கொடி யையும் பறித்துச் சென்றுள்ளனர்.

தேர்தல் காலத்தில் பிரசார வேலைகளைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரகின்றது. எவ்வாறாயினும் எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும்" எனக் கூறினார்.

# 96 பேர் கொண்ட சீன குழுவினர் அடுத்த மாதம் இலங்கை விஜயம்

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங் லியை அடுத்து இன்னொரு சீன உயர் மட்ட அதிகாரிகள் குழு அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளது.

சீன மக்கள் காங்கிரசின் உதவித் தலைவர் யு பங்கோ உட்பட 96 பேர் கொண்ட குழுவே இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் 15ஆம் திகதி வரவுள்ள இந்தக் குழுவினர் வடக்கு, கிழக்கு மற்றும் அம்பாந்தோட்டைப் பகுதிகளைச் சென்று பார்வையிடவுள்ளதாகவும் சீனாவின் கூட்டு முயற்சியில் இடம்பெறும் வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட திட்டங்களையும் ஆய்வு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# புங்குடுதீவுக்கு மின்சாரம்

புங்குடுதீவு கிராமத்தை சேர்ந்த 24, 25, 26ஆம் கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் உள்ளவர்களுக் கான மின் இணைப்பு 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை மின்சார சபையினரால் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மின்சார இணைப்பினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சில்வஸ்திரி அலன்றினின் வேண்டுகோளிற்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆதரவுடன் இந்த மின் இணைப்பானது வழங்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா உட்பட பல நிறுவனங்களி னதும் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொள்ளவர்.



"சிதம்பரவளவாளே போற்றி போற்றி" இசைப்பேழை வெளியீட்டுவிழாவில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் ஒளிப்பேளை வெளியிட்டு வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படம்: மாவிட்டபுரம் நிருபர்)

# வானொலி நேரடி அஞ்சல்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவ நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ் சேவை ஊடாக நேரடியாக அஞ்சல் செய்யப்படவிருக்கின்றன.

இரதோற்சவ நிகழ்ச்சிகளை இன்று காலை 9.00 மணியிலிருந்தும், தீர்த்தோற்சவ நிகழ்ச்சிகளை நாளை காலை 8.00 மணியிலிருந்தும் யாழ் சேவை 92.2, 102 ஆகிய பண்பலை ஊடாக நேயர்கள் கேட்க முடியும்.

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் உற்சவ நிகழ்வுகளை தொகுத்து வழங்குவார். (க)

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## ஐந்தாம் தர பரீட்சை வினாத்தாளும் சந்தையில், கல்வியும் ஒரு வியாபாரப் பண்டமா?

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. பரீட்சை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் குற்றச்சாட்டு மறுநாள் திங்கட்கிழமை முன்வைக்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்தவர்கள் ஐந்தாம் தர பிள்ளைகளின் பெற்றோர்கள் அல்லர். இலங்கை ஆசிரிய சேவைச் சங்கத்தின் பிரதம செயலாளர் இக்குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார். பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானதென்று வெளிவந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக இரகசியப் பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையின் போதும் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பல பாடங்களின் வினாத்தாள்களில் பல்வேறு தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தவறுகளுக்கான திருத்தங்களை அதிகாரிகள் பொறுப்பின்றி “பக்ஸ்” மூலம் அனுப்பிவைத்ததால் வினாத்தாள் தொடர்பான விடயங்கள் அம்பலத்துக்கு வந்ததாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை பல்கலைக்கழக புகுமுக ஜீ.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் எழுந்த இஸற் புள்ளிப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. அதுவும் இழுபறி நிலையிலேயே இருக்கிறது. இவ்வருடம் ஜீ.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னதாகவே இஸற் புள்ளிப் பிரச்சினை ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாததால் இவ் வருடம் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர்.

இவ்வாறான பொதுப் பரீட்சைகளில் தவறுகள், தப்பபிப்பிராயங்கள் என்று எழும் குற்றச்சாட்டுக்கள், மாணவர்களை மட்டுமல்ல, பெற்றோரைக் கூடப் பாதிக்கும். கல்வியமைச்சு, உயர் கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்றெல்லாம் கல்வி சார்ந்த பல நிறுவனங்கள் இருக்கின்றன. இவை இருந்த போதிலும் புதிது புதிதாக பிரச்சினைகள் தோன்றிய வண்ணமே இருக்கின்றன.

இந்த நாட்டில் கல்வியும், மருத்துவமும் விற்பனைக்கு விடப்படுகின்ற வர்த்தகப் பண்டங்களாகவே மாறி நிற்கின்றன. யாழ்ப்பாணத்தினை எடுத்துக் கொண்டால் மூலைக்கு மூலை தனியார் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. இதற்கும் அப்பால் புற்றீசல்கள் போல் புதிது புதிதாக ரியூட்டரிகள் உருவாகி வருகின்றன. யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அனுமதி பெற்ற 77 தனியார் கல்வி நிலையங்களும் அனுமதி பெறாத 22 தனியார் கல்வி நிலையங்களும் இருப்பதாக யாழ்.மாநகரசபை மேயர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டின் சாதாரண மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்த இலவசக் கல்விமுறைக்கு குழிபறிக்கும் முயற்சிகளே பெரும்பாலும் இடம்பெற்று வருகின்றன. சர்வதேசப் பாடசாலைகளை உள்ளூர் தனி நபர்கள் மட்டுமல்ல, சர்வதேச அமைப்புகளும் கூட இலங்கையில் நடாத்தி வருகின்றன. பணம் படைத்தவர்களைப் பொறுத்தவரை சர்வதேசப் பாடசாலைகள் ஓர் வரப்பிரசாதம்தான். ஆனால் சாதாரண மக்களைப் பொறுத்தவரை இலவசப் பாடசாலைகள் பெரும் நெருக்கடிகளை சந்திக்கின்றன. ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்று வளங்கள் நிறைந்த முதற்தரப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பெற்றோர்கள் தவியாய்த் தவிக்கின்றார்கள். ஏனெனில் தேசியப் பாடசாலைகளில் கல்வி வளர்ச்சிக்கு வாய்ப்புகளும், வசதிகளும் மிக அதிகமாகவே இருக்கின்றன. ஒப்பீட்டளவில் மாகாணப் பாடசாலைகளில் வாய்ப்புகளும், வசதிகளும் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

அரசாங்கம் கல்வி, உயர் கல்வித் துறைகளில் அதிக கவனம் எடுக்க வேண்டும். வீதி நிர்மாணம், வீடமைப்புக்கள், சுகாதாரம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமிருக்க முடியாது. ஆனால் எதிர்கால சந்ததியின் சுபீட்சத்திற்காக கல்வித்துறையை வசதி, வாய்ப்புகளுடன் கட்டியெழுப்ப வேண்டியது அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய பாரிய பொறுப்பாகும். நாட்டில் உள்ள பாடசாலைகளில் பலவற்றுக்கு அடிப்படை வசதிகள் கூட இல்லை. மாணவர்கள் இருப்பதற்கு மேசை, கதிரைகள் இல்லை. ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகள் மிகவும் அதிகமாகவே காணப்படுகின்றன.

பரீட்சைகள் முடியும்போது காலத்திற்கு காலம் இவை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பொதுப் பரீட்சைகளைப் போல அவ்வப்போது வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. 2005ஆம் ஆண்டு முதற் தடவையாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கல்வித்துறை சார்ந்தவர்களுக்கு முக்கியமான ஆலோசனை ஒன்றை வழங்கி இருந்தார். கல்வித் துறை சார்ந்தவர்களை அழைத்து, ஆக்கபூர்வமான கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தியிருந்தார். மாணவர்களைப் பரிசோதனைப் பொருட்களாக மாற்ற வேண்டாம் என்றும், அடிக்கடி பாட விதானங்களை மாற்றி கண்ட நிண்டபடி பிரச்சினைகளை உருவாக்க வேண்டாமென்றும் சொல்லியிருந்தார். ஆனால் அவை அனைத்துமே கல்வியியலாளர்களைப் பொறுத்தவரை புறக் குடத்து நீராகின.

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகின என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருப்பவர் சாதாரண ஒரு மனிதரல்லர். இலங்கை ஆசிரிய சேவைச் சங்கத்தின் பிரதம செயலாளரே இதனை முன்வைத்திருக்கின்றார். எனவே, காத்திரமான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதுமட்டுமன்றி இவ்வாறான குற்றச் செயல்கள் இனிவரும் காலங்களிலும் இடம்பெறாதபடி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# இலக்கியத்தில் அறம்

விதை ஒன்றை அவதானித்துக் கொண்டிருந்த பொழுது வாழ்வியல் சார்ந்த ஒரு மேன்மையான உருவகத்தை அதனிடமிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. ஒரு விதை பூமிக்குள் விதைக்கப்படுகிறது. இரண்டு அங்கங்களுடன் அதன் வாழ்க்கை பயணம் துவங்குகிறது. இரண்டு வெவ்வேறு திசைகளில். ஒன்று, கீழ் திசை, தாழ்ந்த திசை, அது ஒரு இருண்ட இடம். புழுக்கமான இடம். இன்னும் சொல்லபோனால் புழுக்கள் நெளியும், ஜந்துக்கள் வசிக்கும் ஒரு இடம். அந்த விதை தனக்காக, தன்னை பூமியில் நிலைநிறுத்திக் கொள்ள, தன் சுயநலனுக்காக சஞ்சரிக்குமிடம். ஆனால் அதற்கு வேறு வழியில்லை. அப்படிதான் அது தன்னை நிலை நாட்டிக்கொண்டாக வேண்டியுள்ளது. பூமிக்குள் நடக்கும் அந்த போராட்டத்தில் மேலும் மேலும் வென்று, தன் இருத்தலை தாங்கி நிற்கும் உறுதியான வேர் பகுதியாக பரிணமிக்கிறது.

இரண்டாவது அங்கம் மேல் திசையில் வளர்கிறது. உயர்ந்த திசை. அது வெளிச்சமான இடம். காற்றோட்டம் நிறைந்தது. மகிழ்ச்சியான இடம். அது தன்னை பிறருக்காக அர்ப்பணிக்குமிடம். அதாவது அது செடியாக வளரும் பொழுதே பிறருக்காக தன்னை அர்ப்பணிக்க தொடங்குகிறது. விலங்குகள் முதல் மனிதர்கள் வரை தன்னை உபயோகப்படுத்திக் கொள்ள அனுமதிக்கிறது. அது தன் இலைகளைத் தருகிறது. காய் கொடுக்கிறது, கனி கொடுக்கிறது. நிழல் கொடுக்கிறது. இறுதியில் மனிதன் தன்னை அழித்த பிறகும் பல வகையில் உதவிக் கொண்டிருக்கிறது. காகிதமாக, கதவாக, நாற்காலியாக, கட்டிலாக அல்லது எரிபொருளாக.

இது இயற்கை நமக்கு கற்றுக் கொடுக்கும் வாழ்க்கை முறை. சராசரி மனிதர்களின் வாழ்க்கை இரண்டாவது அங்கம் இல்லாத ஒரு ஊனமுற்ற வாழ்க்கை. நல்ல ஒரு இலக்கியவாதியின் வாழ்க்கை ஊனமற்றது. அவன் உலக லௌகீகம் என்ற இருண்ட, புழுக்கமான இடத்தில் தன்னை நிலை நாட்டிகொள்ள ஒரு புறம் போராடிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் உலகுக்காக தன்னை அர்ப்பணிக்கவும் தொடங்கிவிடுகிறான். அந்த அர்ப்பணிப்பின் பலனை அவன் மறைந்த பிறகும் உலகம் அனுபவிக்கிறது. அந்த அர்ப்பணிப்பின் சமுதாய அங்கீகரிப்பே அவனுக்கு அது பெற்றுத் தரும் பரிசுகளும், பதக்கங்களும்.

நேர்மையான எழுத்தாளர்கள் தமிழை, இலக்கியத்தை எதிர்வரும் காலங்களுக்கு எடுத்து செல்பவர்கள். அது தான் அவர்களின் இலக்கு. அது மட்டுமே அவர்களின் இலக்கு. பரிசுகளையும், பதக்கங்களையும் இலக்காகக் கொண்டு சிலர் தங்கள் இலக்கிய பயணத்தை மேற்கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் எழுத்தின் உன்னதத்தையே இலக்காகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் படைத்தது ஏதோ நான்கு பேருக்கு பொழுது போகட்டுமே, நமக்கும் பரிசு கிடைக்கட்டுமே என்பதற்காக அல்ல. அவை, தான் இழந்த அறத்தை நோக்கி சமுதாயத்தை மீட்டெடுக்கும் முயற்சிகள். அவர்களின் படைப்புகளை கூர்ந்து நோக்கும் பொழுது, அவை வாசகர்களின் நுண்ணுணர்வுகளுடன் உறவாடி, கலந்துரையாடி அவர்களின் வாழ்க்கையை அறம் நோக்கி திசை திருப்பும் முயற்சிகள் என்பது புலப்படும். அந்த முயற்சியின் உன்னதத்தையே தங்கள் இலக்காகக் கொண்டு பயணிக்கிறார்கள்.

தூய இலக்கியவாதிகள் ஒரு பொழுதும் உன்னதத்தை அடைந்து விட்டதாக நினைக்க மாட்டார்கள். அவர்கள் மேலும் மேலும் மேன்மையை மேம்படுத்த போராடுகிறார்கள். அதை அவர்களுக்கு அவர்களே செய்து கொள்கிறார்கள். வாசகர்களான நமக்கு இது ஒரு பெரும் கொடை. இது போன்ற படைப்பூக்கமே புதிய கதவுகளை நமக்கு திறக்கிறது. புதிய எல்லைகளை நம் முன் விரிக்கிறது. இதன் நன்மைகளை நாம் ஒரு சமுதாய சாத்தியமாக அமைத்துக் கொள்ள இலக்கிய வாசிப்பை ஒரு சமுதாயமாக




வளர்த்தெடுக்க வேண்டும்.

இவற்றை ஒரு தேர்ந்த வாசகன் புரிந்து கொள்ள முடியும். மற்றவர்களுக்கு, ஏன் இலக்கியம் பக்கம் கவனம் செலுத்தவேண்டும்? லௌகீகவாதிகளுக்கு இலக்கியம் எம்முறையில் தொடர்புடையது? அப்படியே ஒரு தொடர்பை கண்டுகொண்டாலும், எவ்விதத்தில் தான் அது நடைமுறைக்கு சாத்தியம்? என்ற கேள்விகளே மிஞ்சுகிறது. அதற்கு லௌகீகவாதிகள் தாங்கள் பயணம் செய்யும் வேகத்தடத்திலிருந்து மெதுதடத்திற்கு தடம் மாறி சிந்திக்கவேண்டும். இன்று நாம் இருப்பின் அச்சாக கருதுவது என்ன? அல்லும் பகலும் அனவரதமும் நாம் சிந்திப்பது பொருள்-பணம். அந்தப் பொருளை ஈட்டித் தரும் தொழிலையோ அல்லது அந்தத் தொழிலால் வரும் பொருளையோதான் நாம் வாழ்க்கையாக உருமாற்றி அறத்தை நம்மிடமிருந்து அறுத்தெறிந்து வாழ்க்கையை நாம் தொலைத்து நிற்கிறோம். அதை நாம் நம் வாழ்க்கையின் பின் பகுதிகளிலேயே உணர்கிறோம். ஏன் இப்படி நடக்கிறது?

பணத்தையே குறியாகக் கொண்டு வாழும் பொழுது அதற்கு இடைஞ்சலாகக் கருதி நாம் நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களைப் புறக்கணிக்கிறோம். பண்புகளைப் புறக்கணிக்கிறோம். பிறர் காட்டும் அன்பை புறக்கணிக்கிறோம். பிறரிடம் காட்ட வேண்டிய அன்பை புறக்கணிக்கிறோம். முன்னேற்றம் என்று சொல்லிக் கொண்டு நமது வாழ்க்கை முறைகளையும் புறக்கணிக்கிறோம். நம் அடையாளத்தை புறக்கணிக்கிறோம். சொல்லப்போனால் இவற்றையெல்லாம் பிற்போக்கு என்று எள்ளி நகையாடி, இன்னும் மானுட உயர் பண்புகளையும், நம் அடையாளங்களையும் கடைபிடிப்பவர்களை அசௌகரியப்படுத்துகிறோம். அவமானப்படுத்துகிறோம். அந்த அசௌகரிய, அவமானங்களால் மன வலுவற்ற சமுதாயத்தில் மெல்ல மெல்ல ஒட்டு மொத்த மக்களின் எண்ணங்களும் சீர்குலைந்து மானுட கலாசாரம் சிதைக்கப்பட்டு நாளடைவில் எப்படியும் வாழலாம் என்று நியாயப்படுத்தி, கடைப்பிடித்து, கடைப் பிடிக்க வைத்து சமுதாய அறத்தை வீழச் செய்கிறோம்.

இப்பொழுது நாம் அப்படிப்பட்ட ஒரு புள்ளியில் தான் நின்று கொண்டிருக்கிறோம். தமிழர் ஒருவரின் வீட்டின் வழியே செல்லும் அறிமுகமில்லாத ஒருவன் வந்து தண்ணீர் கேட்டால் தண்ணீருக்கு பதில் மோர் கொடுக்கும் காலம் இருந்தது. வழிப்போக்கன் ஒருவன் இரவு தங்க இடம் கேட்டால் வீட்டின் வாசல் பக்கம் உள்ள திண்ணையையாவது ஒழித்துக் கொடுக்கும் வழக்கம் இருந்த காலம் உண்டு. தமிழர்கள் விருந்தோம்பலுக்கு பெயர் பெற்றிருந்த காலம் உண்டு. வீட்டிற்கு எவரேனும் வந்தால் அவரை உட்கார வைத்து பேசுவது வழக்கமாக இருந்தது.

இப்பொழுதெல்லாம் அறிமுகமில்லாதவன், ஆபத்தானவன் என்ற நொண்டிச்சாக்கை பேசி, நாம் முன் கதவை இரும்புத் தாழ் போடுகிறோம். ஆபத்து அன்றும் இருக்கத்தான் செய்தது. ஆனால் ஆபத்திற்கிடையே தான் அன்பை தக்க வைத்தார்கள். இது போன்ற அடிப்படைப் பண்பை தக்க வைத்தார்கள். மானுட அறத்தை தக்கவைத்தார்கள்.

இன்று நம் சமுதாய சூழலில் பலர் மாபெரும் சித்தாந்தவாதி களின் வல்லமைக்கான கருத்துகளை உள்நோக்கத்துடன் தங்கள் வசதிப்படி அறத்திற்கு எதிர்மறையாக திரித்தும், திரித்ததை வளர்த்தும் எடுத்து பரப்பி வருகிறார்கள். அப்படி பரப்பப்பட்ட கொள்கைகளே மக்களிடம் ஊடுருவி இன்று சராசரி மக்கள் அறத்தை மறந்து சுயநலத்தை நியாயப்படுத்துகிறார்கள்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# இரு மொழிக் கொள்கையை அமுல்படுத்தாத அரச நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை

### - அமைச்சர் வாசுதேவா கவலை



அரசாங்கத்தின் இருமொழிக் கொள்கையை அமுல்படுத்தாத அரசாங்க நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறினார். இது தொடர்பாக உத்தியோக மொழி ஆணைக்குழுவின் சட்ட விதிகளுக்கு திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்றும் அவர் சொன்னார்.

உத்தியோகபூர்வ மொழி அமுலாக்கலை கடைப்பிடிக்காத அரசாங்க நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தற்போதுள்ள சட்டத்திற்கு வலுப்போதாது. இலங்கையில் சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வ மொழிகள், பொதுமக்களுக்கான கடமைகளை செய்யும்போது இரண்டு மொழிகளையும் பயன்படுத்துமாறு எந்த நிறுவனத்திற்காவது நாம் உத்தரவிட்டால் அதனை ஏற்று அவை செயற்பட வேண்டும். எமது அறிவுறுத்தல்கள் அமுல்படுத்தப்படவில்லையென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு செய்வதற்கு இப்போதுள்ள சட்டத்திற்கு வலுப்போதாது என்றும் அவர் சொன்னார்.

தமிழ் மொழி தெரிந்த பொலிசாரின் எண்ணிக்கை ஐந்து அல்லது ஆறு மடங்கினால் அதிகரிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கிலுள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த அதி கரிப்பு அவசியம் தேவையானது.

தற் போது தமிழ் தெரிந்த அறுநூறு பொலிசார் மட்டுமே கடமையில் உள்ளனர் என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறினார்.

## மக்கள் அரங்கம்

### ஆதிகோவிலடியில் சுகாதாரச் சீர்கேடுகள்

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி பகுதியில் பொதுமக்களுக்கென அமைக்கப்பட்டிருக்கும் மலசலகூடம் மற்றும் குப்பைத்தொட்டி சுகாதார மற்ற நிலையிலும் உடைந்து விழும் நிலையிலும் காணப்படுகிறது.

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட ஆதிகோவிலடி பிரதேசத்தில் வாழ்பவர்கள் நெருக்கமான வீட்டு எல்லைகளிலே வாழ்ந்து வருகின்றனர். அப்பகுதி மக்களுக்கான சில வீடுகளில் மலசல கூடம் இல்லை. காரணம் இடவசதியின்மையே ஆகும்.

அப்பகுதி மக்களுக்காக சுகாதாரத்தை பேணும் பொருட்டு அரச சார்பற்ற நிறுவனம் சுனாமி காலத்தில் ஆண், பெண்களுக்கென தனித்தனி மலசலகூடங்களையும் குப்பைத் தொட்டிகளையும் அமைத்துக் கொடுத்தது. அன்றைய காலத்தில் இருந்து இற்றை வரைக்கும் நகரசபை ஆட்சியில் இதுவும் உள்ளது.

அன்று மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கட்டபட்டிருக்கும் மலசல கூடங்கள் சீரற்ற நீர் வசதிகளும் சுத்திகரிப்பு வசதிகளுடனேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் மக்கள் கடல் நீரையே எடுத்து வந்து பயன்படுத்தி வருகின்றனர். தற்போது இம் மலசல கூடங்கள் துர்நாற்றம் வீசுவதுடன் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. இதனால் கண்ட கண்ட இடங்களிலும் மலசலம் கழிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அரச சார்பற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட குப்பைத் தொட்டிகளில் உள்ள குப்பைகளை உரிய நேரத்தில் நகரசபை அகற்றுவதில்லை. கட்டாக்காலி நாய்களும் காகங்களும் குப்பைகளையும் எச்சங்களையும் வீடுகளில் மீண்டும் போடுகின்றன. எனவே நகரசபை சுகாதாரத்தை பேணும் நடவடிக்கையை புறக்கணிக்காது வலுவுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**- ஆதிகோவிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.**

# மன்னார் முஸ்லிம்களுக்கு சிவில் நிர்வாகத்தின் மீது நம்பிக்கையில்லை

### - பிரஜைகள் குழு

மன்னார் மக்களின் காணிகள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பொறுத்தவரை அவநம்பிக்கையும் பாதுகாப்பற்ற தன்மையுமே பெரும்பாலும் காணப்படுகின்றது.

இவ் வாறான பிரச்சினைகளைக் கையாள் வதற்குச் சம்பந்தப்பட்ட அனை வரும் பெரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்" என்று மன் னார் நிலைமைகளை கண்டறியச் சென்ற பிரஜைகள் குழு என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

மன்னார் உப்புக்குளம் பகுதியில் உள்ள மீன் பிடித் துறைமுகம் சம்பந்தமாக எழுந்த பிரச்சினை பற்றி ஆராய்வதற்குச் சென்ற பிரஜைகள் குழுவே இவ்வாறு தெரிவித்துள்ளது. இந்தக் குழுவில் கலாநிதி தேவநேசன் நேசையா, திருமதி சுலானி கொடிகார, ஜனாபா நமியா காலிக் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

மன்னாரிலுள்ள முஸ்லீம் மக்களுக்கு சிவில் நிர்வாகத்தில் நம்பிக்கையில்லை.

தாங்கள் நீதியற்ற முறையில் நடத்தப்படு வதாக மன்னார் வாழ் முஸ்லீம் கள் கருதுவதே இதற்கு அடிப்ப டைக் காரணமாகும் என்றும் அக் குழு தெரிவித்துள்ளது.

# உரிமை கோரப்படாத 21 சடலங்கள் களுபோவில வைத்தியசாலையில்

களுபோவில வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத 21 சடலங்கள் நீண்ட நாட்களாக சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் வைத்தியசாலை நிர்வாகம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. இந்தச் சடலங்களை எடுத்துச் செல்வதற்கு எவரும் வராததாலேயே அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. விபத்துக்களில் இறந்துபோனவர்களின் சடலங்களும் இங்கு உள்ளன. போலிப் பெயர்களுடன் வைத்தியசாலையில் நோயாளர்களை அனுமதித்தவர்கள், அவர்கள் இறந்த பின் சடலங்களை உரிமை கோர வருவதில்லை.

சடலங்கள் கெட்டுப் போகாமல் பாதுகாப்பதற்கு சவச்சாலையில் 36 குளிர்சாதனப் பெட்டிகளே இருக்கின்றன.

குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ள சடலங்கள் பழுதடையத் தொடங்கியதும் குளிர்சாதனப் பெட்டிகளும் பழுதடைந்துவிடும். இது எமக்கு பெரும் பிரச்சினையாக இருந்துவருகிறது என்று வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் கூறினார்.

# அளவெட்டி நாராயண தேவஸ்தான மகோற்சவம்

**சண்டிலிப்பாய்**

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை 29ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவிருக்கும் இத் திருவிழாவில் தினமும் காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரையும் காலைப் பூசைகளும் மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும் மாலைப் பூசைகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர் உற்சவமும் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்த உற்சவமும்,

9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது.

# முப்பது வருட காலம் ஆயுதமேந்திப் போராடிய தமிழர்கள்: ஒரு அங்குல நிலம் கூடக் கிடைக்கவில்லை

### -அதாஉல்லா



முப்பது வருடகாலம் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழர்கள், ஜெனீவாவில் பிரேரணையை கொண்டு வந்து சர்வதேசத்தை திசை திருப்பியபோதும் இன்னும் ஓர் அங்குல நிலம் கூட இவர்களுக்கு கிடைக்கவில்லை. இந்த நிலையில் முஸ்லிம் மக்களின் உணர்வுகளை தூண்டி, அவர்களை பலிக்கடாவாக்குவதன் மூலம், அதில் குளிர்காய முயற்சிக்கின்றார்கள். முஸ்லிம் மக்களை அரசுக்கு எதிராகத் திசை திருப்பி, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான ரணிலின் கபட நாடகமே பள்ளிவாசல்கள் மீதான வன்முறைச் சம்பவங்களாகும். இதனை சாதகமாகப் பயன்படுத்தி அரசின் மீது பழியைப் போட்டு சரிந்து போயுள்ள தனது வாக்கு வங்கியைச் சீர் செய்ய ஹக்கீம் முயற்சி செய்கிறார்" இவ்வாறு தேசிய மக்கள் காங்கிஸின் தலைவரும், உள் ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதா உல்லா கூறினார்.

தேசிய காங்கிரஸ் சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நிந்தவூர் மீரா நகரில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா மேலும் உரையாற்றுகையில், எதிர்வரும் செப்டம்பர் 9ஆம் திகதி கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய மக்கள் முன்னணி மீண்டும் கைப்பற்றும்.

வடக்கையும் கிழக்கையும் பிரித்து. பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று பெருந் தலைவர் அஷ்ரப் விரும்பினார். அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொண்டு செய்து முடித்தோம். இதனை பொறுத்துக் கொள்ள முடியாது, சரத் பொன்சேகாவை கொண்டுவந்து அவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்குப் போடுமாறு கேட்டவர்கள்தான் ஹக்கீம்.

அவருக்கு இந்த சமூகத்தைப் பற்றி அக்கறை கிடையாது. இரண்டு எம்.பி.க்களைக் கொண்டிருக்கும் நிந்தவூர் கிராமம் எந்த விதமான அபிவிருத்தியையும் அவர்களால் அடைந்து கொள்ளவில்லையென்றால், தமக்குக் கிடைத்த அரசியல் அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்த தெரியாதவர்கள் என்றே கூற வேண்டும்.

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நுவரெலியா மாணவி பரீட்சை எழுதினார்

**சி.பிரியங்கனி**

நுவரெலியா மூன்பிலேன் தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவி எம்.அபிலாசினி நேற்று முன்தினம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருந்தார்.

அதே வேளை அம் மாணவி புற்றுநோய் காரணமாக மஹரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இம் மாணவியின் நிலைமை குறித்து, மாணவியின் பெற்றோர் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், பரீட்சைகள் ஆணையாளர் ஜயசுந்தரவின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து பரீட்சை ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டு மாணவி சிகிச்சை பெற்றுவரும் வைத்திய சாலைக்கு அருகிலுள்ள பாடசாலை யான கொழும்பு மஹரகம வித்தியாலயத்தில் பரீட்சை எழுது வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டது.

இதனால் குறித்த மாணவி எவ்வித சிரமமும் இன்றி பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என அவரது பெற்றோர் தெரியப்படுத்தியுள்ளனர்.

# ஞானோதயா பாடசாலை பழைய மாணவர் சங்கக் கூட்டம் 2 ஆம் திகதி

அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட் டமும், நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட் டத் துக்குப் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# இலக்கியத்தில் அறம்...


(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் போக்கை மறுபரிசீலனை செய்ய நம்மிடம் ஒரு கருவி இருக்கிறது. நாம் நம் தொழிலில் பல காலங்கள் பணிபுரிந்த பிறகு வலுவூட்டும் ஆதரவு பயிற்சி கொடுக்கப்படும். இங்கு டிரைவிங் லைசென்ஸை புதுபிக்க வேண்டுமானால் கூட சில இடங்களில் இந்த வலுவூட்டுப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இன்றைய சமுதாய சூழலில், பள்ளியில் படித்த அறக் கல்வியை கடந்து வயது வந்தபிறகு அறம் பற்றி முறையான கல்வி நமக்கு கிடைப்பதில்லை. அந்த வெற்றிடத்தை அறத்தை பிரசாரம் செய்யும் நல்ல இலக்கியங்கள் நிரப்புகிறது. அறத்தின் குறியீடு. அந்த இலக்கியங்கள் அறத்தின் சொல் வெளிப்பாடு. சங்க கால இலக்கியமான திருக்குறள், ஆத்திச்சூடி போன்றவற்றின் நவீன விரிவான வடிவம்.

இலக்கியங்கள் நம் வாழ்க்கையை நாம் மறுபரிசீலனை செய்ய உதவுகிறது. இப்படிப்பட்ட இலக்கியங்களை நாம் தேடி அடைந்தால் மிகவும் சிறப்பு. ஏன் தேடி அடைகிறோம் என்றால் அதனை ஏற்றுக் கொள்ளும் மன முதிர்ச்சியையும் பக்குவத்தையும் ஓரளவு அடைந்துவிட்டோம் என்பதாலேயே. இது தவிர, சந்தர்ப்ப வசத்தால் இலக்கியம் நம்மை அடைந்தாலும் தவறொன்றுமில்லை. ஆனால் அதை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். இன்றைய சூழலில், சமகாலத்தில், சிறந்த எழுத்தாளர்களை அடையாளம் கண்டுகொண்டு அவர்கள் படைப்புகளை கொண்டாடினால் அது சமூகத்தில் அறத்தை நாம் மீண்டும் சென்றடையும் ஒரு வழியாகும். அதுவே அவர்களின் எழுத்துக்கு கிடைக்கும் மாபெரும் வெற்றி, பதக்கம், பரிசு.

# எதிர்கால சந்ததியினருக்

# தலைமைத்துவ ஆளு



இலங்கையில் பல்கலைக் கழகம் ஒன்றிற்கு அனுமதி பெறுவதென்பது மிகவும் கடினமான விடயமாகும். இதற்கான காரணம் ஆண்டுதோறும் முதலாம் ஆண்டில் சேருகின்ற நான்கு இலட்சம் பிள்ளைகளில் சுமார் 22,000 பேர் மாத்திரமே க. பொ. த. (சா.ஃத) மற்றும் க. பொ. த. (உ/த) ஆகியவற்றில் சித்திபெற்று பல்கலைக்கழகங்களுக்கு தகைமை பெறுவதாகும். இதை வேறுவிதமாகக் கூறுவதாயின் 5 சதவீதமானவர்கள் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதிபெறுகின்றனர். எனவே இவர்களை திறமைசாலிகளிலும் தலைசிறந்தவர்களாகக் குறிப்பிடலாம்.

எனவே இவ்வாறு தலைசிறந்தவர்களாக விளங்கும் இவர்கள் மூன்று அல்லது நான்கு வருட பல்கலைக்கழக கல்வியை பூர்த்திசெய்து வெளியேறி தமக்கும், தமது பெற்றோருக்கும், சமூகத்திற்கும் தாம் பிறந்த மண்ணிற்கும் பாரமான வர்களாக மாறி வேலையற்ற பட்ட தாரிகளின் பட்டியலில் சேர்க்கப்படுவதா னது துர்ப்பாக்கிய நிலையாகும். அது மாத்திரமன்றி அவர்கள் தொழில்தேடி அரசியல்வாதிகளின் பின்னாலும் பிற நபர்களின் பின்னாலும் செல்வதென்பது அதைவிடவும் கவலைக்குரிய விடயமாகும். எனவே இவ்வாறானவர்களின் திறமைகளை அடையாளம் கண்டு இவர்களை தகுந்த தொழில் துறைகளில் இணைத்துக்கொள்ள வேண்டிய நிலையொன்று காணப்படாமையும் துர்ப்பாக்கியமானதாகும்.

இவ்வாறானதொரு நிலையில் ஒருசில பல்கலைக்கழகங்களில் இருந்தும் பீடங்களிலிருந்தும் வெளியேறும் மாணவர்களுக்கு தொழில் அவர்களை தேடி வருகின்ற போதிலும் அவர்களிடம் ஒரு குழுவை எவ்வாறு வழிநடத்துவது ஒரு குழுவிற்கு தலைமை வகிப்பது எப்படி? போன்ற தலைமைத்துவ பண்புகள் மற்றும் ஆளுமை விருத்தி என்பன அவர்களிடம் காணப்படுவதில்லை. இந்நிலை தற்போதைய பல்கலைக்கழக முறைமைக்கேற்ப வெளியேறும் பட்டதாரிகளில் 40 - 50 சத வீதமான வர்களிடையே காணப்படும் குறைபாடாக உள்ளதாகவும், இதற்கான காரணம் ஆளுமை விருத்தி மற்றும் மனநிலை மாற்றம் என்பன காணப்படாமையென ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

மேலும் ஆங்கில அறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பனவும் இவர்களிடம் மிகவும் குறைவாகவே காணப்படுவதாக அந்த ஆய்வின் மூலம் மேலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் பிரகாரம் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை பின்வரும் நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. சகல புதிய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி பற்றிய பயிற்சியொன்றினைப் பெற்றுக் கொடுத்தல்.

2. பேச்சு ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான மூன்று மாத மென் திறன் (Soft Skills) கட்டாய மூன்று மாத பயிற்சியொன்றினை பெற்றுக் கொடுத்தல்.

3. ஆசிரியரை மையமாகக் கொண்ட கல்விக்குப் பதிலாக மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட கல்வித் துறைக்கு பல்கலைக்கழக சமூகத்தை மாற்றியமைத்தல்.

4. மரபுவழி வருகின்ற சிந்தனைகளி லிருந்து விடுபட்டு அறிவுபூர்வமான முறையில் நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்கும், அறிவைத் தேடி கற்றுக்கொள்வதற்கான திறமை பட்டதாரியாக விரும்பும் ஒருவருக்கு பெற்றுக்கொடுப்பதற்கும் வழிகாட்டல்.

எனவே இதனடிப்படையில் தற்போது அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற மூன்று துறைகளும் தமது நிறுவ னங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்ய விரும்பும் பட்டதாரிகளிடம் பின்வரும் மூன்றுவிதமான திறன்களை எதிர் பார்க்கின்றன. அவையாவன,

1. தொழில்நுட்ப ஆற்றல்
2. மனிதவள ஆற்றல்
3. எண்ணக்கரு சார்ந்த ஆற்றல் என்பனவாகும்.

இதனடிப்படையில் இன்று பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரி ஒருவருக்கு தொழில்நுட்ப அறிவு

உள்ளபோதிலும் அவை பழைமை
காணப்படுகின்றன. அவ்வாறே தலை
என்பவற்றுடன் பணியாற்றக் கூடிய
துக்களுக்கு செவிசாய்க்கும் தன்மை
காணப்படல் வேண்டுமென சகல
இவ்வாறானவர்களினாலேயே தமது
இட்டுச் செல்ல முடியுமென அவை
இவ்வாறான திறமைகள் பல்கலை
பட்டதாரிகளிடம் உள்ள னவா என்

மேலே நாம் கூறிய தொழில்நுட்ப
மனப்பான்மை ஆகிய துறைகளில்
பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூ
திட்டமிட்டு செயலாற்றக்கூடிய ஒரு
பல்கலைக்கழகங்களிலிருந்து வெள
காணப்படுதல் வேண்டும்.

தற்போது ஒருசில கடும் க்கு
குழுக்கள் கொடூரமான முறையில்
அவர்களின் மனநி லையை பூச்சிய
அவர்களின் கையாட்களாக மாற்றி
கலாசாரத்திற்கு நாம் முற்றுப்புள்ளி

இவ்வாறு புதிய மாணவர்கள் மா

> “தலைமைத்து
> தன்மை என்பவற்
> பணியாற்றக் கூடி
> மற்றையவர்களின்
> துக்களுக்கு செவி
> தன்மை என்பன
> பட்டதாரியிடம் கா
> வேண்டுமென ச
> நிறுவனங்களும்
> இவ் வாறானவர்
> தமது நிறுவனத்
> வளர்ச்சிப்பாதைக்
> முடியுமென அ
> எனவே இவ்வா
> பல்கலைக்கழகங்
> வெளியேறும் பட்
> களிடம் உள்ளன
> கேள்விக்குறியாகு

விருத்தி மற்றும் தலைமைத்துவ ஆ
காணப்படாமையாகும். இதனாலேதா
போராட்டங் களை நடத்துவதற்கு
களில் அவர்கள் சிக்குகின்றனர்.

எனவே இவ்வாறான தீய செயற்
தீய சக் திகளின் அடிவருடிகள்க
மாறுவதை தடுத்து அவர்களை ந

# க்கு அவசிமான
# மை விருத்தி

வாய்ந்ததாகவே
லைமைத்துவம், பொறுப்புத் தன்மை
அறிவும், மற்றையவர்களின் கருத்
மை என்பனவும் ஒரு பட்டதாரியிடம்
நிறுவனங்களும் எதிர்பார்க்கின்றன.
நிறுவனத்தை வளர்ச்சிப்பாதைக்கு
வ நம்புகின்றன. எனவே
க்கழகங்களிலிருந்து வெளியேறும்
ன்பது கேள்விக்குறியாகும்.
பம், மனிதவளம் மற்றும் சிறந்த
வளர்ச்சி பெற்று
டிய, நெகிழ்ச்சித் தன்மையுள்ள,
நவராக
ளியேறும் பட்டதாரிகள்

தன்மை கொண்ட மாணவர்
புதிய மாண வர்களை தாக்கி
யத்திற்கு கொண்டுவந்து
பகிடி வதை செய்யும்
ரி வைத்தல் வேண்டும்.
மாறுவ தற்கான காரணம் ஆளுமை

**வம், பொறுப்புத்**
**ற்றுடன்**
**ய அறிவும்,**
**ன் கருத்**
**சாய்க்கும்**
**வும் ஒரு**
**ணப்படல்**
**கல**
**எதிர்பார்க்கின்றன.**
**ர்களினாலேயே**
**ந்த**
**க்கு இட்டுச் செல்ல**
**வ நம்புகின்றன.**
**றான திறமைகள்**
**ங்களி லிருந்து**
**டதாரி**
**வா என்பது**
**தும். ”**

ஆற்றல் என் பன அவர்களிடம்
தான் பதாதைகளை ஏந்திக்கொண்டு
ஒரு சில தீய சக்திகளின் வலை

ற்பாடு களில் ஈடுபடுபவர்களாகவும்
கவும் பல்கலைக்கழக மாணவர்கள்
நல்வழியின்பால் இட்டுச் சென்று

நாட்டிற்குத் தேவையான சிறந்த நற்பிரஜைகளாக அவர்களை மாற்றும் நோக்கில் உயர் கல்வி அமைச்சு பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து “ஆளுமை விருத்தி மற்றும் மனநிலை மாற்றம்” தொடர்பான மூன்று வார பயிற்சியொன்றை பல்கலை க்கழக அனுமதி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது எதுவிதத்திலும் இராணுவ , பயிற்சி யொன்றாக் (Military Training) அமையாது. 28 பயிற்சி நிலையங்களில் 22,000 மாணவர்களுக்கும் ஒரே முறையில் இப்பயிற்சி வழங்கப்படுகின்றது. எனவே இதற்கான சிறந்த பயிற்றப்பட்ட ஆளணியும் இடவசதியும் பாதுகாப்பு அமைச்சிடம் மாத்திரமே காணப்படுகின்றன.

இதன்போது ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் வதிவிட வசதி வழங்கப்பட உள்ளதுடன் பயிற்சியின் உள்ளடக்கம் பின்வருமாறு,

1. உயர் கல்விக்கும், பல்கலைக்கழக கல்விக்கும் இடையிலான வித்தியாசத்தை விளக்குதல்
2. பூகோள ரீதியான மாற்றவியல் மற்றும் இலங்கையின் சமூக பொருளாதார மாற்றவியல் பற்றி விளக்குதல்
3. இலங்கையின் எதிர்கால நோக்குபற்றி விளக்குதல்
4. சகல மாணவர்களும் திட்டமிட்டு செயற்படுவதற்கான திறன் விருத்தி
5. ஆளுமை விருத்தி, தலைமைத்துவ விருத்தி மற்றும் குழு செயற்பாடு
6. கோட்பாட்டு ரீதியான அறிவை செயல்முறையில் கொண்டு வருவதில் காணப்படும் தடைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்.
7. சுய அபிமானத்தை விருத்தி செய்தல் மற்றும் பிறர் உழைப்பில் தங்கி வாழாதிருப்பதற்கான ஆற்றல்.


இவ்வாறான பெறுமதிவாய்ந்த குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டே தலைமைத்துவ பயிற்சிநெறி மே மாதம் 23 முதல் யூன் 12 வரை யில் தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களில் நடத்தப்பட உள்ளன. இந்நிலையங்கள் மாணவர்களின் வீடுகளுக்கு அண்மையில் சிலசேவைகளில் அமையாதிருக்கலாம். எனினும் இவற்றில் கலந்து கொள்ள வேண்டியது கட்டாய மானதாகும்.

பயிற்சியின் இறுதியில் பெறுமதிமிக்க சான்றிதழொன்று வழங்கப்படுவதுடன் எதிர்காலத்தில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு அது அவர்களுக்கு துணை நிற்கும்.

எனவே உங்களது பிள்ளைகளையும் இந்த பயிற்சிகளில் பங்கேற்கச் செய்து அவர்களது எதிர்காலத்தை சீர் செய்து கொள்ளலாம். இப்பயிற்சி நெறிகளில் எதுவித அச்சமுமின்றி பங்கேற்கச் செய் யவும். கட்டுக்கதைகளுக்கும் வதந்தி களுக்கும் அகப்பட வேண்டாம். இப் பயிற்சி நெறி நடத்தப்படும் ஒவ்வொரு நிலைங்களுக்கும் பொறுப்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் இருப்பார். பெண்களுக்கு பெண் விரிவுரையாளர்களெனவும்



ஆண்களுக்கு ஆண் விரிவுரையாளர்களெனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். எனவே உங்களது பிள்ளையின் எதிர்கால நலன்கருதியும் அவர்கள் நற்பிரஜைகளாக வாழ்வதற்கும் வழிகாட்டும் இப்பயிற்சியில் அவர்கள் இணைந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்துங்கள்.



# இலங்கையிடமிருந்து கச்சதீவை மீள பெறும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை

**த ஹிந்து தகவல்**

கச்சத்தீவின் அதிகாரத்தை இலங்கையிடம் இருந்து மீளப் பெறும் எண்ணம் இந்தியாவிடம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுகள் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் இதனைத் தெரிவித்திருப்பதாக த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள வெளிங்டன் பாதுகாப்பு பயிற்சி முகாமில் இலங்கை பாதுகாப்பு தரப்பினர் இருவர் பயிற்சி பெற்று வருவதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறும் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் வலியுறுத்தி இருந்தார்.

இது தொடர்பில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது, ரஞ்சன் மாத்தாய் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் இந்த கோரிக்கை தொடர்பில் இந்திய பாதுகாப்பு அமைச்சு பரிசீலித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், கச்சத்தீவின் அதிகாரம் 1974ஆம் ஆண்டு இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அதனை மீளப்பெறும் எண்ணம் இந்திய மத்திய அரசாங்கத்திடம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**அவுஸ்திரேலியா செல்ல முயற்சி:**

# வடமராட்சி கிழக்குக் கடலில் 58 பேர் கடற்படையிடம் சிக்கினர்

அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலமாகச்செல்ல முற்பட்ட 58 பேரை வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் கொட்டோடை பகுதிக் கடற்கரையிலிருந்து அவுஸ்ரேலியாவுக்கு இயந்திப்படகு ஒன்றில் செல்ல முற்பட்டவர்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் அனைவரையும் பருத்தித்துறைக் கடற்கரைக்கு அழைத்து வந்த கடற்படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி, முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த ஆண்கள்,பெண்கள் மற்றும் குழந்தைகள் சிறுவர்கள் உட்பட 58பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக அவுஸ்திரேலியா நோக்கி வடக்கு , கிழக்கு மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றமையும் அவர்களைக் கடற்படையினர் கைதுசெய்து சட்ட நடவடிககை மேற்கொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் வான் விபத்து யாழ்.வாசி உட்பட 18பேர் காயம்

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சுற்றுலா சென்றிருந்த 13 பேர் விபத்துக்குள்ளாகி காயமடைந்துள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜோன் (வயது 28), மட்டகளப்பு பகுதியை சேர்ந்த குமுதா(45), நேசலட்சுமி (43) மற்றும் அமெரிக்கா, பிரான்ஸ், லண்டன் ஆகிய பகுதிகளில் வசிக்கும் இவர்களின் உறவினர்கள் அன்ரனி இருதயராஜ் (32), அஞ்சலின்(22), அகிலன் (20), அருள்தாஸ் (32), அரசன் (3) உள்பட 17 பேர் சுற்றுலாவாக தமிழகத்தை சுற்றிப் பார்க்க கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னை வந்தனர்.

அவர்கள் சென்னையில் சுற்றுலா வான் ஒன்றை வாடகைக்கு எடுத்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று சுற்றி பார்த்தனர். வானை சென்னையை சேர்ந்த லாசர் (25) என்பவர் ஓட்டிச்சென்றார்.

நேற்று இறுதியாக கொடைக்கானலை சுற்றிப்பார்த்து விட்டு சென்னைக்கு திரும்பி கொண்டு இருந்த வேளை, அந்த வான் உளுந்தூர்பேட்டை அருகே ஷேக் உசேன் பேட்டை என்ற இடத்தில் விபத்துக்குள்ளானது.

# மாடுகளைத் திருடியவர்களுக்கு பொலிஸார் வலை வீச்சு

இறைச்சிக்காக வளர்க்கப்பட்ட 30 மாடுகளை திருடிச் சென்ற சந்தேகத்தின் பேரில் வெல்லவாய பிரதேசத்தில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லவாய, தெமலிய பிரதேசத்தில் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் படி 23 மாடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் இருவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கு வளர்க்கப்பட்டவை எனவும், இவை சிலரால் திருடப்பட்டுள்ளதாகவும் மாடுகளின் உரிமையாளர் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டிற்கு அமைவாக விசாரணைகளை நடத்தி வந்த பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ள நிலையில் அவரிடம் பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் ஏனைய சந்தேக நபர்களைத் தேடி வலைவிரித்துள்ளனர்.

# இறுதிச் சான்றிதழ் பரீட்சை

(மருதனார்மடம்)

இலங்கைப் பரீட்சைத்திணைக்களம் ஆண்டுதோறும் நடாத்தும் அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - இந்துசமயம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15ஆம் 16ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

15ஆம் திகதி காலை இந்து சமய வரலாறு, மாலை இந்துசமய மெய்யியல் 16ஆம் திகதி காலை இந்து சமய இலக்கியம் மாலை இந்து சமய வாழ்வியல் என நான்கு பாடநெறிகளுக்கான வினாத்தாள்களை அடக்கியதாக இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது. (01)

# பஸ் வண்டிகளில் முதியோருக்கு இடஒதுக்கீடு:செயற்றிட்டம் ஆரம்பம்

முதியோரின் உரிமைகளையும் அவர்களது நலனோம்பு விடயங்களையும் கருத்தில் கொண்டு முதியோருக்கு பஸ்களில் ஆசனமொதுக்கும் செயற்றிட்டம்மொன்றினை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் வவுனியா அலுவலகம் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து ஆரம்பித்துள்ளது.

வவுனியா நகர இலங்கை போக்குவரத்து சபை பஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பஸ்களில் முதியோருக்கான ஆசனங்களை ஒதுக்கும் பொருட்டு முதியோரின் படங்கள் இணைக்கப்பட்ட ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

இந்நிகழ்வில் சமூகசேவைகள் திணைக்களத்தின் வட மாகாண தலைமைக்காரியாலய உத்தியோகத்தர்கள் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன், இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை முகாமையாளர் எஸ்.குணராஜா, வவுனியா மாவட்ட முதியோர் சம்மேளனத்தின் தலைவர் மற்றும உறுப்பினர்கள், யு.என்.எச்.சி. ஆரின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேர்த் திருவிழா இன்று

(வலிகாமம்)

வரலாற்றுப் புகழ்மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை.5.30 மணிக்கு நடைபெறும் திருவனந்தல் பூசையைத் தொடர்ந்து ஸ்தம்பபூஜை வந்த மண்டபப் பூசைகள் நடைபெற்று தொடர்ந்து சுவாமி தேரில் வெளி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும்.

அடியவர்களின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் பஸ் சங்கத்தினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் தெல்லிப்பழைக்கு பஸ் சேவைகள் இடம் பெறவுள்ளன.

# வடக்கின் வசந்தத்தின் கீழ் மண்டைதீவுக்கு மின்சாரம்

(தீவகம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மண்டைதீவு கிராமத்தின் மின்சார தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


வடக்கின் வசந்தத் திட்டத்தின் இலங்கை மின்சார சபையினது முகாமையாளர் எந்திரி குணசீலனினது மேற்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தினை எந்திரி சி.எச்.வீரசேகரா பொறுப்பேற்று நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களுக்கான கடவுச்சீட்டு: செல்லுபடிக் காலமும் கட்டணமும் அதிகரிப்பு

16 வயதிற்குட்பட்ட இலங்கை சிறுவர்களுக்கான கடவுச்சீட்டின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் மூன்று வருடங்களால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் முதலாம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டுக்கள் இந்த திட்டத்திற்கு உட்படவுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, புதிதாக வழங்கப்பட விருக்கும் கடவுச்சீட்டுக்களுக்கான கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது. இதன்படி சகல நாட்டிற்குமான கடவுச்சீட்டினை பெறுவதற்கு 3500 ரூபாவும், சாதாரண சேவைகளுக்காக 1500 ரூபாவும் செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாவலர் மணி மண்டபத்தில் நடத்திய சிறப்பு நிகழ்வுகளின்போது இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் திருமதி அனந்தலட்சுமி மாணிக்கராஜசர்மா உரையாற்றுவதையும், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்குவதையும் படங்களில் காணலாம்.


# ஆரோக்கியம் தரும் மூலிகைக் குடிநீர் சில:

நோயில்லாத வாழ்வே சிறப்பான வாழ்க்கையாகும். இத்தகைய வாழ்வு வாழ நாம் கடைப்பிடிக்க வேண்டியது சுகாதாரமே. சுகாதாரம் என்பது உண்ணும் உணவு முதல் உடுத்தும் உடை வரை எல்லாமே அடங்கும். அது போல், உடலும், மனமும் நன்றாக இருந்தால் அதுவே ஆரோக்கியமாகும். இன்றைய சூழலில் குடிநீர், உணவு, இருப்பிடம், காற்று என அனைத்தும் மாசுபட்டுக் கிடக்கின்றன. வளரும் நாடுகளில் குடிநீரினால் உண்டாகும் நோய்களே மக்களை அதிகம் பாதிப்பதாக ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. பிளாஸ்டிக் பாட்டில்களில் அடைத்து விற்கும் நீர் கூட சுத்தமானது என்பதை உறுதி செய்ய முடியாது. இவைகள் பெரும்பாலும் இரசாயன வேதிப் பொருட்கள் கலந்ததாக உள்ளன. இவற்றை அருந்துவதால் பல நோய்களுக்கு இதுவே அஸ்திவாரமாக அமைந்து விடுகிறது. இதனால் நன்கு சுத்தமான நீரை அருந்த வேண்டும். உணவின் மூலமும், நீரின் மூலமும் நோய் தடுக்கும் மருந்துகளை உட்கொள்ள சித்தர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அதில் வெறும் குடிநீரை அருந்துவதை விட சித்தர்கள் கண்டறிந்து கூறியுள்ள மூலிகைக் குடிநீரை அருந்தினால் உடலுக்கு சக்தி கிடைப்பது மட்டுமின்றி நோயும் தடுக்கப்படும்.

அந்த வகையில் ஆவாரம் பூ குடிநீர், கரிசாலை குடிநீர், நன்னாரி குடிநீர், துளசி குடிநீர், வல்லாரை குடிநீர், சீரகக் குடிநீர், நெல்லிப்பட்டைக் குடிநீர், மாம்பட்டைக் குடிநீர், ஆடாதோடைக் குடிநீர், போன்றவை அடங்கும்.

**ஆவாரம்பூ குடிநீர்**



"ஆவாரை பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ.." என்ற மருத்துவப் பழமொழி உண்டு. ஆவாரம் பூ எண்ணற்ற மருத்துவ குணங்களைக் கொண்டது. இது நோய்களைக் குணப்படுத்துவதால் நோயினால் மனிதன் இறப்பதை தடுக்கிறது. இன்றைய உலக மக்கள் தொகையில் பாதிபேர் சர்க்கரை நோயால் அவதிப்படுகின்றனர். இந்த சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும், குணம் ஆவாரைக்கு உண்டு. மேலும் மேனிக்கு தங்க நிறத்தைக் கொடுக்கும் தங்கநிறப் பூவும் இதுதான்.

நீரில் ஆவாரம் பூக்கள் அல்லது காயவைத்த ஆவாரம் பூ பொடி சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி, குடிநீராக அருந்தி வரலாம்.

இது உடல் சூடு, பித்த அதிகரிப்பு, நீர்க்கடுப்பு, அதிக உதிரப்போக்கு, ஒழுங்கற்ற மாதவிடாய், குடற்புண் வயிற்றுப்புண் போன்றவற்றை நீக்கும்.

நீரிழிவு நோயாளிக்கு இது மிகவும் சிறந்த மூலிகைக் குடிநீர் ஆகும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும், உடலில் உள்ள தேவையற்ற கழிவுகளை வியர்வை மூலம் வெளியேற்றி, சருமத்திற்கு மினுமினுப்பைக் கொடுக்கும்.

**துளசி குடிநீர்**

துளசி நமக்கு அருமருந்தாகும். துளசி இலையுடன் சீரகம் சேர்த்து நீரில் கொதிக்க வைத்து குடிநீராக அருந்தி வந்தால் உடலுக்கு பல நன்மைகள் உண்டு. அடிக்கடி வெளியூர் பயணம் செய்பவர்களுக்கும், வெயில் மற்றும், மழைக் காலங்களில் அலைந்து திரிபவர்களுக்கு துளசி குடிநீர் அருமருந்தாகும். இது உடற்சூடு, பித்தம் போன்றவற்றைத் தணிக்கக் கூடியது.

மஞ்சள் காமாலை, மலேரியா, காலரா நோய்கள் ஏற்படாமல் தடுக்கும். தொண்டைச்சளி, வறட்டு இருமல், புகைச்சல், தலையில் நீர் கோர்த்தல், அடிக்கடி தும்மல், போன்றவற்றைப் போக்கும். இரத்தத்தில் உள்ள சளியை நீக்கி இரத்தத்தை சுத்தப்படுத்தும்.

**வல்லாரை குடிநீர்**

எல்லா நோய்களுக்கும் கொடுக்கப்படும் மருந்தில் முதல் மருந்தாகவும், துணை மருந்தாகவும் இருப்பது வல்லாரை. இதனை சரஸ்வதி மூலிகை என்று அழைக்கின்றனர். இது மூளைக்கும், அதன் செயல்பாட்டிற்கும் அதாவது அறிவுத் திறனுக்கும், ஞாபக சக்திக்கும் ஏற்ற மூலிகையாகும். காயவைத்த வல்லாரை பொடியை நீரில் போட்டு கொதிக்க வைத்து அனைவரும் அருந்தலாம்.

இது ஞாபக சக்தியைத் தூண்டுவதுடன், பித்த அதிகரிப்பைக் குறைக்கும்.



இரத்தத்தில் ஏற்படும் இரும்புச் சத்துக் குறைபாட்டைப் போக்கி இரத்தச் சோகையை நீக்கும். நரம்புகளுக்கு புத்துணர்வு கொடுக்கும்.

**சீரகக் குடிநீர்**

சீரகம் ஸ்ரீசீரகம். அகம் என்னும் உடலை சீர்படுத்துவரே சீரகத்தின் சிறப்பான குணமாகும். சீரகத்தை நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி ஆறிய நீரை தினம் பருகி வருவது நல்லது. இது உடற் சூட்டைத் தணிக்கும். பித்தத்தைக் குறைக்கும். இரத்தத்தில் உள்ள தேவையற்ற பொருட்களை நீக்கி, இரத்தத்தைக் சுத்தப்படுத்தும். வியர்வை மற்றும் சிறுநீரைப் பெருக்கும். கண் சூட்டைக் குறைக்கும். வாய்ப்புண் வயிற்றுப்புண்ணைப் போக்கும். சரும நோய்கள் வராமல் தடுக்கும்.

**ஆரோக்கிய நாதம்**

# இரத்த சோகை

### இரத்த சோகை என்றால் என்ன?

இரத்தத்தில் இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை அல்லது ஹீமோகுளோபினின் அடர்த்தி குறைவதே இரத்தசோகை என்று அழைக்கப்படுகிறது. இரத்தத்தின் சிவப்பணுக்களுக்குள் இருக்கும் [illegible] புரதம் தான் ஹீமோகுளோபின் இதில் இரும்புச் சத்து இருக்கும்.

இது தான் இரத்தத்தில் ஒட்சிசனைக் கடத்துகிறது. இன்று இந்தியாவில் 70 சதவிகிதம் பேர் இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெண் குழந்தைகளுக்கு சிறு வயது முதலே அவர்கள் உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்தான உணவுகள் இன்றி வளர்கின்றனர். இதனால் அவர்களின் உடல் வளர்ச்சி மாறுபாட்டின் போது அவர்கள் போதிய சத்தின்றி உடல் நலம் குன்றிக் காணப்படுகின்றனர்.

இரும்பு சத்துக் குறைவினால் அதாவது இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு குறைவதால் உடல் சேர்வடைந்து விடுகிறது. மேலும் பெண்களுக்கு மாத விலக்கு காலங்களில் ஏற்படும் உதிர இழப்பால் எலும்புகள் பலமிழக்கின்றன. இரத்தத்தில் பித்தம் அதிகரித்து இரத்தம் சீர்கேடு அடைந்து தலைவலி, தலைச்சுற்றல், வாந்தி மயக்கம் ஏற்படுகின்றது.


மேலும் கர்ப்பப்பை வீக்கம், ஒழுங்கற்ற உதிரப் போக்கு, வெள்ளைபடுதல் போன் றவை ஏற்படுகிறது. இதனால் இரத்த சோகை அதாவது அனீமியா ஏற்படுகிறது. காரணங்கள் இரத்த சிவப்பணுக்கள் தொடக்கம் சீராக இல்லாத நிலையில் இரத்த சோகை உண்டாகும். வலுவற்ற, பாதிக்கப்பட்ட எலும்பு மஜ்ஜையினாலும் இரத்த சோகை உண்டாகும்.

இரத்த சிவப்பணுக்கள் இறந்து போவதால் இரத்த சோகை ஏற்படும். இரத்தம் அதிகம் வெளியேறுவதால், இரத்தம் மாறுபடுதல், வயிற்றில் அல்சர், வயிற்றில் கட்டி, வயிற்றில் வீக்கம், வயிற்றிலோ, குடலிலோ ஏற்படும் புற்று நோய் காரணமாக சில சமயம் தொடர்ந்து இரத்தம் உள்ளே கசியும், வீக்கத்தைக் குறைக்கும் மருந்துகளை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் அவை காலப்போக்கில் வயிற்றில் இரத்த கசிவை ஏற்படுத்தலாம்.

குழந்தையின் பிறப்பின் போது ஏற்படும் இரத்த இழப்பு போன்ற காரணங்களால் இரத்த சோகை பெண்களுக்கு ஏற்படுகிறது. மேலும் இவர்கள் குழந்தை பேறுக்குப்பின் உடல் பலம் இழப்பதால், கை, கால் மூட்டு, இடுப்பு போன்ற இடங்களில் வலி ஏற்படுகிறது.

**அறிகுறிகள்:**

மயக்கம் அல்லது காரணமில்லாத சோர்வு, சிறிது உணவு சாப்பிட்டவுடன் வயிறு நிறைந்து விட்டது போன்ற உணர்வு, உணவு செரிமானமாகாமல் இருத்தல், உடல் வெளுத்து காணப்படல், முகத்தில் வீக்கம் உண்டாகுதல், நகங்களில் குழி விழுதல், குழந்தைகளுக்கு கண் குவளைகள் மற்றும் நாக்கு வெளுத்து இருத்தல், உடல் நலம் சரியில்லாதது போன்ற உணர்வு, மூச்சு விடுவதில்



சிரமம், இதயம் வேகமாகத் துடிப்பது அல்லது தாறுமாறாகத் துடிப்பது, குளிர்ச்சியான சூழலைத் தாங்க முடியாமை.

இதெல்லாம் போக தலைவலி, நாக்கு உலர்ந்து, போவது, சுவையுணர்வு பாதிக்கப்படுவது, உணவை விழுங்கச் சிரமமாக இருப்பது, உடல் வெளுத்துப் போவது, வாயின் ஓரங்களில் புண் ஏற்படுவது, அதிகம் வியர்ப்பது, கால்களை ஆட்டிக் கொண்டே இருப்பது, கை கால்களில் வீக்கம், வாந்தி போன்ற அறிகுறிகள் சிலருக்கு அரிதாக ஏற்படும்.

நோய் எதிர்ப்பு சக்தியில் ஏற்படும் குறைபாடு, நோய் தொற்று சில மருந்துகள், நச்சுப் பொருள்கள் ஆகியவற்றால் ஹீமமோசிலிஸ் ஏற்படலாம். இரத்த சோகை இருப்பவர்களுக்கு சோர்வும், சோம்பலும் ஏற்படும், சோர்வு என்பது உடல் ரீதியானது. சோம்பல் என்பது மனரீதியானது.

ஒருவர் உடல் ரீதியாக சோர்வாக இருந்தால் அவரது மனநலன் பாதிக்கப்படும் வாய்ப்பும் இருக்கிறது. இவை போக மேலும் சில அறிகுறிகள் இருக்கின்றன.

**பரிசோதனை:**

இரத்த சோகை இருப்பது சாதாரண இரத்த பரிசோதனையின் மூலமே தெரிந்து விடும். ஒருவருக்கு இரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைவாக இருப்பதாக தெரிந்தால் அவருக்கு இரத்த சோகை இருப்பதாக அர்த்தம். நோயாளியின் உடலில் இரும்பு சத்து குறைவாக இருந்தால் அவருடைய இரத்த சிவப்பணுக்கள் சிறியதாகவும், வெளுத்துப் போயும் காணப்படும்.

### இரத்த சோகையால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள்:

**பிரசவம்:**

கர்ப்பமான பெண்களுக்கு இரத்த சோகை இருந்தால் பிரசவத்தின் போதும், அதற்கு பிறகும் பல சிக்கல்கள் ஏற்படலாம், பிரசவத்தின் போது பொதுவாகவே அதிக இரத்த இழப்பு ஏற்படும். ஏற்கனவே இரத்த சோகை நோய் இருந்தால், ரத்த இழப்பு உயிருக்கே ஆபத்தாக முடியும். தாய்க்கு இரத்த சோகை இருந்தால் குழந்தை குறைப் பிரசவத்திலும், குறைவான எடையுடனும் பிறக்கும் வாய்ப்பிருக்கிறது. அந்த குழந்தைகளுக்கும் இரத்த சோகை ஏற்படும் வாய்ப்பிருக்கிறது.

**சோர்வு:**

இரத்த சோகை நோயாளிகளின் வாழ்க்கை முறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும், இரத்த சோகை தீவிரமாக இருந்தால், வேலை பார்ப்பதே அவர்களுக்கு மிகவும் கடினமான காரியமாக இருக்கும். தங்களுடைய தினசரி வேலைகளையே அவர்களால் கவனிக்க முடியாமல் போகக்கூடும்.

**உணவுமுறை:**

நோயாளி இரும்பு சத்து இல்லாத உணவுகளை உண்ணும் பழக்க உடையவராக இருந்தால், இரும்பு சத்து அதிகம் இருக்கும் உணவுகளை அவர் சாப்பிட வேண்டும், கீரை, பீன்ஸ், பருப்பு வகைகள், சோயா பீன்ஸ், உலர் திராட்சை ஆகியவற்றில் இரும்பு சத்து அதிகம் இருக்கிறது. வலிநிவாரணி, வீக்கத்தை குறைக்கும் மருந்துகளாலும், இரத்த சோகை ஏற்படலாம் என்பதால் அவற்றிற்கான மூல காரணத்தை சரி செய்ய வேண்டும்.

இத்தகைய இரத்த சோகையை போக்க குழந்தைகளுக்கு உணவில் அதிக இரும்பு சத்துள்ள கீரைகளை முருங்கைக்கீரை, அரைக் கீரை, ஆரைக்கீரை, புதினா, கொத்த மல்லி, கறிவேப்பலை, அகத்திக் கீரை, பொன்னாங் கண்ணி கீரை போன்ற கீரைகளையும், திராட்சை, பேரீட்சை, உலர்ந்த திராட்சை, பப்பாளி, அத்திப் பழம், மாம்பழம், பலா பழம், சப்போட்டா ஆப்பிள், நெல்லிக்கனி போன்ற பழங்களையும் தினமும், கொடுத்து வருவது நல்லது.

இதனால் இரத்தம் விருத்தி அடைந்து இரத்த சோகை நீங்கும். மேலும் முளைகட்டிய பச்சை பயறு, முந்திரி பருப்பு, உளுத்தங்களி, பருப்பு போன்றவை அதிகம் உணவில் சேர்த்து வருவது நல்லது.

ஆனால் அவைகளுடைய விவாதங்களில் மிகவும் முக்கியமனதாக காற்று இயந்திரம் பற்றி நடந்த விவாதத்தைத்தான் சொல்ல வேண்டும். பண்ணை வீட்டுக்கருகில் இந்த புல்வெளியில் ஒரு பெரிய மேடு இருந்தது. பண்ணையிலே அதுதான் அதிக உயரமான இடம். அந்த இடத்தை எல்லாம் அளந்து கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு, அங்கு ஒரு காற்றாடி இயந்திரம் அமைப்பதின் மூலம் ஒரு மின்சார உற்பத்தி இயந்திரம் இயக்கி பண்ணைக்கே மின்சாரம் உண்டாக்கலாம் என்றது அது.

இரவில் வெளிச்சமும் பகலில் உஷ்ணமும் தர மின்சாரம் உபயோகப்படும். விலங்குகள் சௌகரியமாக வாழ்ந்து முன்னேற காற்றாடி இயந்திரம் மிகவும் உபயோகப்படும். அது தவிர மின்சாரத்தினால் ரம்பம், புல்வெட்டி, மற்றும் பல தினுசான வெட்டிகள் பால் கற்கும் இயந்திரம் முதலிய எல்லாவற்றையும் இயக்கலாம் என்றும் சொல்லிற்று ஸ்நோபால்.




விலங்குகள் அதுவரையில் இதுபோன்ற எதையும் பார்த்துமில்லை, கேள்விப்பட்டதுமில்லை.


(அந்தப் பண்ணை பழைய பண்ணை: நவீன நாகரீக சாதனங்கள் உடைய பண்ணை அல்ல) விலங்குகள் எல்லாம் ஆச்சரியத்துடன் ஸ்நோபாலின் திட்டங்களைக் கேட்டன. சௌகரியமாக ஒரு வேலையும் செய்யாமல் அவை மேய்ந்து கொண்டிருக் கையில், மின்சாரத்தால் இயங்கும் விதவிதமான யந்திரங்கள் அவர்களுடைய வேலைகளை எல்லாம் ஒரு விநாடியில் செய்து முடித்துவிடும் என்று ஸ்நோபால் சொல்லியதை ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தன அவை. மின்சாரம் வந்துவிட்டால் விலங்குகளுக்கு ஏராளமான அவகாசம் இருக்கும். அலுப்பு என்பதே இராது.

சில வாரங்களுக்குள்ளாகவே ஸ்நோபால் காற்றாடி இயந்திரம் திட்டத்தைப் பூரணமாக்கிவிட்டது. திருவாளர் ஜோன்ஸின் அறையில் இருந்த ஒரு புத்தகங்களைப் படித்துப் படித்து, அந்தத் திட்டத்தை சாத்தியமாக்குவது எப்படி என்று ஸ்நோபால் கண்டுபிடித்து முடித்துவிட்டது. "வீட்டில் செய்யக்கூடிய ஆயிரம் காரியங்கள்" "ஒவ்வொருவனும் கட்டிடம் கட்டலாம்", "மின்சாரத்தில் ஆரம்பப் பாடங்கள்" என்கிற மூன்று புத்தகங்களை வைத்துக்கொண்டு தன் காற்றாடி இயந்திரத் திட்டத்தை உருவாக்கிவிட்டது.

ஸ்நோபால். கோழி முட்டைகளை வைத்துக் குஞ்சு பொரிக்க வைக்கும் அறையில் படங்கள், கட்டிடத் திட்டங்கள், கணக்குகள் எல்லாவற்றையும் போட்டுப் பார்த்துத் தன் திட்டங்களைப் பூரணமாக உருவாக்கிற்று.

(நாளை...)

## வரைவோம் வாருங்கள்!



## நகைச்சுவைக் கதை

ஒரு அரசனிடம் சுயமாக சிந்திக்கத் தெரியாத ஒருவன் வேலை பார்த்து வந்தான். ஒரு நாள் அரசன் அவனுடன் வெளியூர் சென்றான். வழியில் இருட்டி விட்டது. எனவே அங்கிருந்த ஒரு சத்திரத்தில் தங்க முடிவு செய்து, குதிரையை வெளியில் ஒரு மரத்தில் கட்டிவிட்டு, வேலைக்காரனிடம், இரவு முழுவதும் தூங்காமல் குதிரையைப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்.

இரவு முழுவதும் எப்படி தூங்காமல் இருப்பது என்று சந்தேகம் கேட்க, அரசனும் ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்சினை பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தால் தூக்கம் வராது என்றார்.

அவனும் சரி என்றான். சிறிது நேரம் கழித்து அரசர், அவன் என்ன செய்கிறான் என்பதை சோதிக்க வெளியே வந்தார். அவனும், "அரசே, நான் தூங்கவில்லை. வானில் இருக்கும் நட்சத்திரங்கள் தானாக வந்ததா அல்லது யாரேனும் கொண்டு வந்து போட்டார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.



நல்லது என்று கூறிச்சென்ற அரசன் சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்தார். அவன் சொன்னான், "அரசே, கடலில் உப்பு தானாக வந்ததா அல்லது யாரேனும் கொண்டு வந்து கொட்டினார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்".

அரசன் நிம்மதியுடன் படுத்து தூங்கிப் போனான்.காலையில் எழுந்து வந்து பார்த்த போது வேலையாள் சீரிய சிந்தனை வசப்பட்டு இருப்பதைப்

பார்த்த அரசன், "இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

அவன் சொன்னான், "அரசே, உங்கள் குதிரை தானாக ஓடி விட்டதா அல்லது யாரேனும் திருடிச் சென்று விட்டார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்".



### கேள்வி:

பத்து தென்னங்கன்றுகள் இருக்கின்றன. ஐந்து வரிசையில் வைக்க வேண்டும் ஆனால் ஒவ்வொரு வரிசையிலும் நான்கு கன்றுகள் இருக்க வேண்டும். எப்படி வைப்பீர்கள்?

### குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிறுவர் அமுதம்

### தாவி வா குரங்கே!



மனிதன் போல இருக்குது
மரத்தின் மேலே ஏறுது
கனியும் காயும் தின்னுது
காடு மலையில் வாழுது
இனிக்கும் கரும்பை ஒடிக்குது
இன்ப மாகத் தின்னுது
மனித னுக்கு வாலில்லை
மந்தி குரங்கைப் போலவே
கூட்டம் கூட்ட மாகவே
கூடி வாழும் குரங்கினம்
ஆட்டம் பாட்டம் போடுமே
ஆலம் விழுதில் தொங்குமே
ஓட்ட மாக ஓடியே
ஒன்றை யொன்று பிடிக்குமே
நாட்டித் தடியை ஓங்கவே
கடிக்கப் பாயும் நம்மையே

### விடுகதைகள்




1.வெட்ட, வெட்ட தளைக்கும். அது என்ன?

2.வெள்ளைப் பிள்ளையார் கோவிலில் விழுந்து கும்பிட இடமில்லை.

3.கத்திபோல் இலை இருக்கும், கவரிமான் பூ பூக்கும், தின்ன பழம் பழுக்கும், தின்னாத காய் காய்க்கும். அது என்ன?

4.ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது என்ன?

5.வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்?

1.நகம் 2.முட்டை
3.வேப்பமரம் 4.உள்ளங்கை
5.பாம்பு

சுடோக்கு எண் 38 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 1 | 3 | 5 | 2 | 6 | 8 | 4 |
| 2 | 8 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 | 5 |
| 4 | 5 | 6 | 8 | 7 | 1 | 2 | 9 | 3 |
| 6 | 4 | 7 | 1 | 3 | 9 | 5 | 2 | 8 |
| 3 | 2 | 9 | 5 | 6 | 8 | 1 | 4 | 7 |
| 5 | 1 | 8 | 4 | 2 | 7 | 9 | 3 | 6 |
| 1 | 6 | 5 | 9 | 8 | 3 | 4 | 7 | 2 |
| 7 | 3 | 4 | 2 | 1 | 5 | 8 | 6 | 9 |
| 8 | 9 | 2 | 7 | 4 | 6 | 3 | 5 | 1 |

சுடோக்கு எண் 39

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | | | | |
| | | | | | 7 | 9 | 4 | 1 |
| 4 | 8 | | | 3 | | | 2 | 7 |
| | | 9 | | | | | 7 | |
| 8 | 4 | | | | | | 5 | 9 |
| | 7 | | | | | 1 | | |
| 7 | 2 | | | 8 | | | 1 | 6 |
| 1 | 6 | 4 | 7 | | | | | |
| | | | | | 4 | | | |

# ஸ்ரீ துர்க்காதேவி இரதோற்சவ சிறப்பு மலர்


## தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம்

அருள்மிகு துர்க்கை அம்பாளின் எழில்மிகு தோற்றத்தை இன்று தெல்லிப்பழை துர்க்கா புரப் பகுதியிலே ஆயிரமாயிரம் உள்ளங்கள் ஒன்றுபட்டுத் தரிசிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் வடபால் காங்கேசன்துறைப் பெருந்தெரு வழியே எட்டாவது மைல்கல் தொலைவில் அமைந்திருக்கும் இவ்வாலயம் துர்க்கை அம்பாளின் பரிபூரண சக்தியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான பழைமை வாய்ந்த இவ் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றையும், இன்றைய எழுச்சிப் பெருநிலையையும் அறிந்து கொள்வது பயன்தருவதாகும்.

**பூர்வீகச் சிறப்பு:**

தொன்றுதொட்டு வளமும், பண்பாடும் சார்ந்த மக்கள் இலங்கும் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை கொண்டுள்ள பிரிவுகளிலே உழவுத் தொழிலைக் கைக்கொண்டு வரும், உயர் புகழுக்கு வித்துமாக கொடைப் பண்புடையதாக செறிந்திலங்கும் உழுகுடைப்பதி வவுணாவத்தையிலே சைவ மரபிலே வந்தவர் சைவப்பெரியார் கதிர்காமர். இவர் சிறந்த சைவக்குடியில் தோன்றியவர். இளமையிற் கற்பன கற்றும், கேட்பன கேட்டும் உடம்பினாற் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்டல் என்னும் சைவநெறி பற்றியே ஒழுகினார்.

ஏறக்குறைய 1750ஆம் ஆண்டளவில் கதிர்காமர் இந்தியாவுக்குத் தலயாத்திரைக்காகப் புறப்பட்டு காங்கேசன் துறையில் தோணியேறித் தென்னிந்தியாவின் கீழைக்கரையில் உள்ள வேதாரணியத்திலே கரையேறினார். அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகத் தல வழிபாடு செய்து கொண்டு காசித்திருத்தலம் வரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறைய பத்து வருடங்கள் கடந்தன. இக்கால வெல்லைக்குள் அவர் தமிழையும் சமஸ்கிருதத்தையும் நன்கு கற்றுத்தேறி ஒரு துர்க்கை உபாசகராகவும் மாறிவிட்டார். அதனால் ஏறக்குறைய 1760ஆம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திரும்பும்போது துர்க்காதேவி யந்திரமொன்றையும், வெண்கலத்தினாலமைந்த 'திருமுகக்கெண்டி' உருவமொன்றையும் கையோடு கொண்டு வந்தார். அன்பர் கதிர்காமர் அவர்கள் காசியிற் பலநாள் தங்கியிருந்தார். இந்தியா முழுவதிலுமுள்ள சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள்ளும் காசியினுள்ள சொப்பனேஸ்வரி பீடம் முக்கியமானது. துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிந்திருக்கும் பீடம் அது. அன்பர் கதிர்காமர் குறித்த யந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருந்தார் என எண்ணுதற்கு இடமுண்டு. காசியாத்திரையை முடித்துக் கொண்டு காங்கேசன்துறையை வந்தடைந்த இப்பெரியார் கீரிமலையில் புண்ணிய தீர்த்தமாடி அங்கிருந்து நடந்து மூன்றுமைல் தூரம் இவ்விடம் நோக்கி வந்துகொண்டிருந்தார். திருவருள் அவரது நடையிலே தளர்வைத் தோற்றுவித்தது. ஆயிரக்கணக்கான மைல் தொலைவெல்லாம் நடைகொண்ட நம் பெருந்தகையின் ஆற்றலிலே



அடங்கி துர்க்கை அங்கிருந்து கொண்டு அனைவருக்கும் திருவருள் பாலிக்கும் திருக்கருணை கொண்டாள். நடைதளர, உடல் தளர, அண்டியிருந்த இலுப்பைத் தோப்பிலே இளைப்பாறினார். திருவருட் கருணையால் அவர் முன்தோன்றி அவர் கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை அங்கே தாபிக்கு மாறு ஆணை பிறந்தது. அவ்வாணையைச் சிரமேல் தாங்கி மரத்தடியிலே சக்கரத் தை அமைத்து வழிபடத் தொடங்கினார். தெல்லிப்பழை உழுகுடைப்பதி இலுப்பைத் தோப்பிலே நாகசர்ப்பங்கள் வருவதுண்டு. அவை அங்கு பூசை முடிந்தவுடன் மறைந்து விடும். வெளிப்படத் தோன்றும் காலங்களிலும் பிற காலங்க ளிலும் யாரையும் அச்சமுறும் அளவிற்குக்கூட நாகங்கள் நடந்துகொண்டதில்லை. பூசைக் காலத்திலே குருக்கள் பாம்புகளுக்குப் பாலும் பழமும் வைத்து வழிபடலும், அவை அவற்றை உட்கொள்ளலும் உண்டு. கதிர்காமர் தாம் கொண்டுவந்த யந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் ஸ்தாபனம் செய்து வழிபட்ட இடமே இன்று துர்க்காதேவி தேவஸ்தானமாக வானளாவும் கோபுரமும், அலங்கார வளைவு கொண்ட நுழைவாயிலும், அழகிய தெப்பக்குளமும் எழிலூட்டி நிற்கக் காட்சி தருகின்றது. கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலையமாயிருந்த இந்த ஆலயம் பரார்த்த பூசைக்குரிய நிலையமாய் இன்று விருத்தி அடைந்தவற்றை மேற்கூறிய செய்தி உணர்த்துகிறது.

***தர்மகர்த்தா சபையும் நிர்வாக சபையும்:***


1948இல் தனி முகாமையாளர் க. நாகநாதர் அவர்களினால் பதினொரு பேரைக் கொண்ட தர்மகர்த்தா சபையினரிடம் ஆலய பரிபாலனம் ஒப்படைக்கப்பட்டது. 1965இல் உப சபையாக பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு அவர்களே பரிபாலனப் பொறுப்பை ஏற்று நடத்தினர். பராமரிப்பில் அன்று முதல் இன்றுவரை ஆலயம் சிறப்பான வகையில் வளர்ச்சி பெற்று வருகிறது. நிர்வாக சபையின் ஏற்பாட்டில் முதலாவது கும்பாபிஷேகம் 1965ஆம் ஆண்டு 1965 ஆம் ஆண்டு ஆவணி ஓணத்திலும், இரண்டாவது கும்பாபிஷேகம் 1981 சித்திரை உத்தரத்திலும், மூன்றாவது கும்பாபிஷேகம் 1997 ஆவணிச் சுவாதியிலும் சிறப்பாக நடைபெற்றது. நான்காவது கும்பாபிஷேகம் 2011 தைத்திங்கள் பத்தாம் நாளன்றும், சிறப்பாக நடைபெற்றது 1977 முதல் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைவராகப் பணிபுரிந்து ஆலயப் பணிகளுடன் பன்முகப்பட்ட சமுதாய சமூகப்பணிகளையும் ஆற்றிவந்தார். இது ஒரு வரலாற்றுப் பதிவாக இருப்பதுடன், சைவத் தமிழ் உலகத்தினால் என்றென்றும் மதித்துப் போற்றப்படும் பெருமையையும் அம்மையார் பெற்றிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி யன்று அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ஆலய நிர்வாக சபைத் தலைவராகப் பொறுப்பேற்று, அம்மை யாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சிறப்பாகச் சேவையாற்றி வருகிறார்.

**மகோற்சவ பெருவிழா:**

துர்க்காதேவி ஆலய வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது 1968ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகோற்சவமாகும். ஆவணி மாத பூர்வபட்சத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த விழாவோடு நிறைவு பெறுவது ஆலயத்தின் மகோற்சவ ஒழுங்காகும். பன்னிரண்டு தினங்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. 2009ஆம் ஆண்டிலிருந்து ஆலயத்திற்கு திருமஞ்சம் வடிவமைக்கப்பட்டு, மஞ்சத் திருவிழாவும் நடைபெற்று வருகிறது.

***பல்துறைப்பட்ட சமூகப்பணிகள்:***

ஆலயங்களெல்லாம் அறச்சாலைகளாக அமையவேண்டும் என்ற புனித நோக்கத்திற்கமைய இவ்வாலயம் ஆற்றிவரும் பணிகள் குறிப்பிடத்தக்கதாகும். சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியம் 1989ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை சிறப்பாக இயங்கி வருகின்றது. ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 7ஆம் திகதியில் இதன் பயன்பாடு நிகழ்கிறது. நூல்வெளியீடு, அறிஞர்களைக் கௌரவித்தல் மற்றும் பொதுநல சேவைகள் ஊடாக செயற்பாடுகள் அமைகின்றன.



## வாழ்வு ஆனவள், வாக்குமானவள், வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள் துர்க்கா

- தேவஸ்தான தலைவரின் சிறப்புச் செய்தி

அருள் மழை பொழியும் அம்பாளின் பெருமை மிகு திருத்தலம் தெல்லிநகர் துர்க்காதேவி ஆலயம் என்றால் மிகையாகாது. தேசம் போற்றும் தெல்லிநகர் தேவியின் வருடாந்த பெருந்திருவிழா ஆரம்பமாகி மிகவும் சிறப்பாக பக்தர்கள் வழிபாடு செய்து நல்லருள் பெற்று வருகிறார்கள். இன்று திருத்தேர் விழா. பல்லாயிரம் பக்தர்கள் திரண்டு வந்து வடம் பிடித்து வாழ்வு கேட்கும் நன்நாள். கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களின் கைவண்ணத்தில் உருவான அழகிய சிற்பத் தேரில் அம்பாள் வீதி வலம் வரும் திருக்காட்சி அகத்தை ஆனந்த மயப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன் கதிர்காமர் என்ற ஞானி காசியிலிருந்து துர்க்கா யந்திரம் கொண்டு வந்து தெல்லிநகர் உழுகுடை பகுதியில் இலுப்பஞ் சோலையில் ஸ்தாபித்த இத் திருக்கோயிலின் ஞானச் சுடர் தனித்துவமானது. இத் திருக்கோயிலை சீரோடு பராமரித்த தர்மகர்த்தா சபையினர் பரந்த நோக்கத்தோடு பொதுக்கோயிலாக்கி நல்ல நிர்வாகக் கட்டமைப்பையே உருவாக்கினார். நிர்வாக சபையில் கல்வியால்- சமய அறிவால்- சமய வாழ்வால் நிறைந்த சான்றோர் பெருமக்கள் அணி செய்தனர். துர்க்கா தேவியின் திருவருளால் துர்க்காதேவியே அவதாரம் எடுத்து வந்தது போல் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இத் திருக்கோயில் பணியில் இணைந்த நாள் முதல் இத் திருத்தலம் உலகப் பிரசித்தி பெற்றது. அன்னையின் தலைமையில் இக் கோயில் சகல வளங்களையும் கொண்ட பெரிய தேவஸ்தானமாக வளர்ச்சி கண்டது.

இன்று எவ்விதமான குறையுமின்றி அம்பாள் நிறை செல்வத்தோடு தன்னை நாடி வருபவர்களுக்கும் நிறைந்த வாழ்வு கொடுத்து அருள் பாலிக்கின்றாள். 2011ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டமை அம்பா ளின் திருவருளே. எத்திருப்பணியை தொடங்கினாலும் அம்பாளின் அருளும் அடியார்களின் ஆர்வமும் இருப்பதால் திருப்பணி வேலை கள் உடன் பூர்த்தியாகி விடும் அற்புதத்தை எடுத்துரைக்க முடியாது. எல்லாம் துர்க்காதேவியின் சித்தம்.

துர்க்காபுரம் மகளிர் இல்லம் கடந்த முப்பது ஆண்டுகளாக அம்பாளின் நிழலில் சிறப்பாக இயங்கி வருகின்றது. தற்போது எமது இல்லத்தில் வன்னியுத்தம் காரணமாக சிறுமிகளின் தொகை அதிகரித்து இருப்பது யாவரும் அறிந்ததே. அச் சிறுமிகளின் வசதிக் காக ஆலயத்தின் தென் திசையில் மிக நவீன வசதிகள் கொண்ட விடுதிச்சாலை அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடையும் நிலை யிலுள்ளது. ஆலயத்தில் தொடர்ந்து ஆதரவற்றவர்களுக்கு உதவும் அறப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஏழை மாணவர் கல்வி ஊக்குவிப்புக் கொடை முதல் அவசர நோயாளர்களுக்கென உதவி வரை நிலை உணர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. அம்பாளின் திருவருளால் தேவஸ்தானப் பணிகள் பாரிய வளர்ச்சி பெற்று வருகின்றன.

தேவஸ்தான வளர்ச்சிக்கு உதவும் பக்தர்களுக்கும் தர்மகர்த்தாசபை, நிர்வாக சபை, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், பெண்கள் தொண்டர் சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள், தேவஸ்தான சிவாச்சாரிய பெருமக்கள், பணியாளர்கள் அனைவரது பரிபூரண ஒத்துழைப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

*- கலாநிதி ஆறு.திருமுருகன்.*

### தேரேறி வலம்வரும் துர்க்காதேவி!

சித்திரத் தேரேறி அம்மா சிங்காரமாய் வந்திடுவாய்
பக்தரைக் காத்திடவே அம்மா பனிமலர் தூவிடுவாய்
இத்தரை மீதினிலே அம்மா இலுப்பை நிழலமர்ந்தாய்
பக்தர் துயர்போக்க அம்மா வீதிவலம் வருவாய்!

*- மாவை சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்*

ஆற்றா மறழுத அருமந்த பிள்ளைக்கு
அமுதளித்த தாயே தேரேறி வருக
நோற்றார் மனதில் நினைத்ததை யெல்லாம்
நொடியில் அளிப்பவளே தேரேறி வருக
கூற்றாம் வறுமையைக் கொன்றே ஒழித்து
செல்வத்தை அருள்பவளே தேரேறி வருக
மாற்றார் மனதில் மயக்கத்தை யறுத்து
மாற்றம் செய்திட தேரேறி வருக!

*மதுரகவி. காரை எம்.பி. அருளானந்தன்.*

## இனிய வாழ்வு அருளும் துர்க்காதேவி

சக்தி எங்கும் தளைத்து ஓங்க
சகத்து மழையா வருவாள்
பக்தி வைத்து பாதம் நாளும்
பணிப வர்க்கு அருள்வாள்!

செவ்வாய் தோறும் செல்லும் கன்னி
செகத்து நன்றாய் வாழ
பவ்விய மாகப் பதியதும் தேடி
பரம திருப்தி கொள்வாள்!

குடும்ப பிரிவு வறுமை என்றால்
கும்பிட் டருளைத் தேடும்
இடும்பை நீங்கி இனிய வாழ்வு
இக்கண மாமே நாடும்!-*கவிஞர் பாலி*


**மகிஷாசுரமர்த்தினி:** மாபெரும் தபஸ்வியான வரமுனி, அகந்தை மேலிட்டு அகத்தியரையும் மற்ற முனிவர்களையும் அவமானப்படுத்தியதால், சபிக்கப்பட்டு மகிஷாசுரனாகப் பிறந்தான். துர்க்காதேவி அந்த மகிஷாசுரனைக் கொன்றதால் மகிஷாசுரமர்த்தினி என்ற பெயரைப் பெற்றதாக புராண வரலாறு சொல்கிறது.

# தொலைந்துபோகும் பத்திரிகையாளர்கள்: சிரியாவில் தொடரும் அவலம்

சிரியாவின் அலெப்போ நகரில் சுட்டுக் கொல்லப்பட்ட ஜப்பான் பத்திரிக்கையாளர் மீக யமமோதாவின் சடலம், அவரது நாட்டுக்கு இறுதிச் சடங்குகளுக்காக கொண்டு வரப்பட்டது.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்தின் ஆதரவு படைகளுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையேயான உள்நாட்டு போர் தீவிரமடைந்து வருகின்றது.

இக்கலவரத்தில் அப்பாவி பொது மக்கள் அதிகளவு பலியாகின்றனர். இதுதவிர செய்தி சேகரிக்க சென்ற பத்திரிக்கையாளர்களின் மீதான தாக்குதல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளது.கடந்த 20ஆம் திகதி நடந்த கலவரத்தில் ஜப்பான் பத்திரிக்கையாளர் மீக யமமோதா படுகொலை செய்யப்பட்டார். இவரது சடலம் இறுதிச் சடங்குகளுக்காக ஜப்பான் கொண்டு வரப்பட்டது. யமமோதோ சிரியா கலவரத்தில் கொல்லப்



பட்ட முதல் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஆவார். அவருடனிருந்த கசுதாகா சாதோ என்ற பத்திரிகையாளருக்கு எவ்விதக் காயமும் இல்லை.

இவர் தவிர ஜோர்டான், துருக்கி, அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர்களையும் காணவில்லை.

ஆஸ்ட்டின் டைஸ் (வயது 31) என்ற அமெரிக்கப் பத்திரிகையாளர் மெக்கிளாட்சே நிறுவனத்துக்காக செய்தி சேகரிக்க வந்தார். அவரை கடந்த 11ஆம் திகதி முதல் காணவில்லை. அவரது பத்திரிகை ஆசிரியர்கள் அவரை தேடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்காவின் நிதி உதவியுடன் நடத்தப்படும் அல் - ஹுரா தொலைக்காட்சியைச் சேர்ந்த பத்திரிகையாளர் குழுவை 20ஆம் திகதி முதல் காணவில்லை.

இத்தொலைக்காட்சியின் ஜோர்டான் நிருபரான பஷார் ஃபாமியும், துருக்கிய ஒளிப்பதிவாளரான குனெய்ட் உனாலும் அலெப்போ நகரில் உள்ள சிரியா படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.


இந்நிலையில் ஆறு அம்ச சமாதான திட்டத்தை செயல்படுத்த வந்த ஐ.நா குழுவின் தலைவர், தான் வந்த பணி நிறைவேறாத காரணத்தினால் சிரியாவை விட்டு கிளம்பி விட்டார்.

# பிரான்ஸ் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அசாஞ்ச்

பிரான்சில் இடதுசாரிக் கட்சியினர் நடத்திய கூட்டத்தில், விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்ச் உரையாற்றினார்.

பிரான்சில் கிரிநோபிள் அருகே செயிண்ட் மார்ட்டின் டி ஹெரெஸ் பகுதியில் இடதுசாரியினர் பொதுக் கூட்டம் நடத்தினர்.

அப்போது அவர்கள் மத்தியில் அசாஞ்ச் தொலைபேசி வழியாக நிகழ்த்திய உரையில், பிரான்ஸ் விக்கிலீக்சுக்கு முக்கியமான



நாடாகவே எப்போதும் இருந்திருக்கிறது என்றார்.

மேலும் தன்னை அமெரிக்காவுக்கு நாடு கடத்தப் போவதில்லை என்று உறுதியளித்தால், தான் ஸ்வீடனில் நடக்கும் வழக்கு விசாரணைக்குப் போவதில் தடையேதும் இல்லை என்றார்.

இக்கட்சியின் தலைவரான ஜான் லுக் மெலென்கோன், தமது நாட்டின் அரசிடம் அசாஞ்சுக்கு ஆதரவு அளிக்குமாறு கூறினார். பிரெஞ்சு பத்திரிகைகள் சிலவும் அசாஞ்சுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

# பணம் கொடுத்தால் ஹரியின் அந்தரங்கங்களை வெளியிடுவோம்: இளம்பெண்கள் பரபரப்பு பேட்டி

அமெரிக்க ஹொட்டலில் இளம் பெண்ணுடன் இங்கிலாந்து இளவரசர் ஹரி நிர்வாணமாக இருக்கும் புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் பேரனும், சார்லஸ் டயானாவின் இளைய மகனுமான ஹரி இராணுவ பயிற்சி பெற்று ஹெலிகொப்டர் பைலட்டாக இருக்கிறார்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ படையிலும் இவர் இடம்பெற்றுள்ளார். இவர் சமீபத்தில் விடுமுறையை கழிக்க நண்பர்களுடன் அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகருக்கு சென்றார்.

அங்குள்ள நட்சத்திர ஹொட்டலில் 2 இளம்பெண்களுடன் ஹரி நிர்வாணமாக இருக்கும் காட்சிகள் புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன. இதனால் இங்கிலாந்து ராணி குடும்பத்தினர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

அந்த புகைப்படங்களை வெளியிட கூடாது என்று பத்திரிகைகளுக்கும், இணையத்தளங்களுக்கும் ராணி குடும்பத்தினர் எச்சரிக்கை விடுத்தன. எனினும் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக ஹரியை பற்றி செய்திகள் படங்கள் வெளிவந்தன.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் ஹாரியுடன் நிர்வாணமாக இருந்த 2 இளம்பெண்கள், ஹொட்டலில் நடந்தது பற்றி வெளியில் சொல்ல 1.4 கோடி பேரம் பேசி வருகின்றனர். ஏற்கனவே இளம் பெண்ணுடன் ஹொட்டல் அறையில் ஹரி நிர்வாணமாக இருக்கும் புகைப்படத்தை பெறுவதற்காக அந்த பெண்ணுக்கு 55 இலட்சம் ரூபாயை டிஎம் இசட் இணையத்தளம் வழங்கியதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்க பப்ளிகேஷன் மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில், இளம்பெண்கள் கேட்கும் தொகை இப்போதைக்கு கொஞ்சம் தான். இந்த விசயத்தை வைத்து அவர்கள் ஜாக்பாட் அடித்து செல்ல போகிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.


ஹரியின் அந்தரங்க விடயங்களை வெளியிட பெண்கள் பேரம் பேசி வருவது ராணி குடும்பத்தினருக்கு மீண்டும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது.

# சர்ச்சைகளை தொடர்ந்து பேஸ்புக் கணக்கை மூடினார் ஹரி

அமெரிக்க ஹொட்டலில் இளம் பெண்களுடன் நிர்வாணமாக இருந்த புகைப்படங்கள் இணையத்தில் வெளிவந்த சர்ச்சையை தொடர்ந்து இளவரசர் ஹரி தனது தனிப்பட்ட பேஸ்புக் கணக்கை தற்போது மூடியுள்ளார்.

பிரித்தானியாவில் மன்னராக முடிசூடவுள்ளவர்களில் மூன்றாவது நிலையில் உள்ள இளவரசர் ஹரி (வயது 27), Spike Wells எனும் புனைப்பெயரில் பேஸ்புக் கணக்கு வைத்திருந்தார்.

400க்கும் மேற்பட்ட நண்பர்களும் அவரது கணக்கில் இணைந்



திருந்தனர். இந்நிலையில் இளவரசர் ஹரியின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரி ஜேமி லாவ்தர் பிங்கேர்டனின் ஆலோசனைக்கு அமைவாக தற்போது பேஸ்புக் கணக்கை டீஅக்டிவேட் செய்துள்ளார் ஹாரி.

கடந்த சில தினங்களுக்கு முன்னதாக அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் ஸ்ட்ரிப் கேம்ஸ் விருந்தில் ஹாரியின் நிர்வாண புகைப்படங்களை பிரபல அமெரிக்க காஷிப் இணையத்தளம் TMZ வெளியிட்டது.

எனினும் ஹரியின் நெருங்கிய நண்பர்கள் சிலரால் பேஸ்புக்கில் அப்டேட் செய்யப்பட்ட இப்புகைப்படங்களே TMZ இற்கு கிடைத்ததாக முறைப்பாடு எழுந்தது.

# உலக பார்வை

## மிகச் சிறந்த மனிதர்களுள் ஒருவர் நீல் ஆம்ஸ்ட்ராங்: ஒபாமா புகழாரம்

நீல் ஆம்ஸ்ட்ராங் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, அமெரிக்காவின் மிகச் சிறந்த மனிதர்களுள் ஒருவர் என புகழாரம் சூட்டியுள்ளார்.



நிலவில் முதன் முதலாக கால் பதித்த நீல் ஆம்ஸ்ட்ராங்(வயது 82) உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.


இவரது மறைவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அவரது மனைவி மிச்ஷெல் ஆகியோர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஒபாமா கூறுகையில், நிலவில் கால்பதித்த அந்தத் தருணம், மனித குலத்தின் மகத்தான சாதனையை அவர் விவரித்த விதம் ஒருபோதும் மறக்கப்பட முடியாத ஒன்று.

அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, எப்போதுமே அமெரிக்காவின் மிகச் சிறந்தவர்களுள் அவரும் ஒருவர்.

அப்போலோ 11 விண்கலத்தில் தன் குழுவினரோடு விண்வெளிக்குச் சென்ற போது, ஒட்டுமொத்த அமெரிக்கர்களின் ஆர்வத்தையும் அவர் சுமந்து சென்றார்.

கற்பனைக்கும் எட்டாத அமெரிக்கர்களின் தன்னம்பிக்கையை எதுவும் சாத்தியமே என்பதை அவர் உலகுக்குக் காட்டினார் என்று தெரிவித்துள்ளார்.




அமெரிக்காவின் நோர்த் ஹாம்ப்ஷையர் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்ள வந்த குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளர் மிட் ரோம்னி மற்றும் அவரது மனைவி ஆன் ரோம்னி.

## பெர்முடா பகுதியில் நீடிக்கும் மர்மம்



பெர்முடா முக்கோணம்

அட்லாண்டிக் கடலின் மர்ம பகுதிக்குள் செல்லும் விமானங்கள், கப்பல்கள் மாயமாகி வருகின்றன. தற்போது பறவைகளும் மாயமாகி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா கண்டங்களுக்கு இடையே அட்லாண்டிக் கடலில் பெர்முடா டிரையாங்கிள் என்ற மர்ம கடல் பகுதி உள்ளது.

இது மியாமி, பெர்முடா மற்றும் பெட்ரோரிகோ பகுதிகளை உள்ளடக்கியது. பெர்முடா பகுதிக்குள் பயணம் செய்யும் கப்பல்கள் மற்றும் விமானங்கள் திடீரென மாயமாகி வருகின்றன. இங்கு அவை உள்ளிழுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

தற்போது அப்பகுதியில் பறக்கும் பறவைகளும் காணாமல் போகின்றன. இதற்கு இங்கு அளவுக்கு அதிகமான பேய் மழை, சூரிய சக்தியின் தாக்கம் மற்றும் ஈர்ப்பு விசையும் காரணம் என கருதப்படுகிறது.

இங்கிலாந்தில் புறாக்கள் பறக்கவிடும் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் ஸ்காட்லாந்தில் இருந்து புறா போட்டியாளர்கள் திர்ஸ்க், வெதர்பி, கான்செட் ஆகிய பகுதிகளில் இருந்து 232 புறாக்களை பறக்க விட்டனர். ஆனால் அவற்றில் 13 புறாக்கள் மட்டுமே திரும்பி வந்தன. மற்றவை மாயமாகி விட்டன.


எனவே காணாமல் போன புறாக்கள் பெர்முடா பகுதியில் கடலுக்குள் உள்ளே இழுக்கப்பட்டிருக்கலாம் என்ற பீதி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே நீண்டதூரம் பறக்க முடியாமல் பல புறாக்கள் கடலுக்குள் விழுந்து இறந்து இருக்கலாம் அல்லது வேறு இடங்களில் தங்கி இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

இருப்பினும் பெர்முடா பகுதியின் மர்மம் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

# நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு அவசியம்:

-அப்துல் கலாம்



சர்வதேச அளவில், நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு அவசியம் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஏவுகணை விஞ்ஞானியுமான அப்துல் கலாம் வலியுறுத்தினார்.

மேலும் சில்லறை வணிகத்தில் நேரடி அந்நிய முதலீட்டிற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.


250 மில்லியன் தொன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்வதன் மூலம், உணவு தானிய உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்திருப்பதாக கலாம் தெரிவித்தார்.

அதே நேரத்தில் 400 மில்லியன் தொன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டால் அதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, அந்த நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என்று கலாம் குறிப்பிட்டார்.

அணு உலை எதிர்ப்பு போராட்டங்கள், வழக்குகளால் தாமதம் அடைந்து வரும் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அப்துல் கலாம் ஆதரவு தெரிவித்தார்.

கூடங்குளம் அணுமின் திட்டம் மிகவும் பாதுகாப்பான ஒன்று என்று குறிப்பிட்ட கலாம், சூரிய ஒளி, புனல் மின் திட்டங்களுக்கும் தமது ஆதரவு உண்டு எனவும் தெரிவித்தார்.

# பிரதமர் பதவி விலகும் வரை நாம் ஓய மாட்டோம்: பாஜக



நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு விவகாரத்தில் பிரதமர் பதவி விலகும் வரை நாடாளுமன்றத்தை செயல்பட விடமாட்டோம் என பாரதிய ஜனதா உறுதிபடத் தெரிவித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் நிலக்கரித்துறை அமைச்சராக இருந்த போது தனியாருக்கு நிலக்கரிகளை ஒதுக்கீடு செய்ததில் 'ரூ. 1 லட்சத்து 86 ஆயிரம் கோடி அளவுக்கு மத்திய அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை நாடாளுமன்றத்தில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்டது.

அதைத்தொடர்ந்து நாடாளுமன்ற நடவடிக்கைகளை பாரதிய ஜனதா உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் தொடர்ந்து முடக்கி வருகின்றனர்.


நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு விவகாரம் தொடர்பாக, பிரதமர் பதவி விலகவில்லை என்றால் நாடாளுமன்றத்தை தொடர்ந்து முடக்குவோம் என பாரதிய ஜனதா தெரிவித்துள்ளது.

ஆனால்,ஐக்கிய ஜனதா தளம், சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ், தெலுங்கு தேசம், பிஜு ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகள் நாடாளுமன்றத்தில் இப்பிரச்னை பற்றி விவாதிக்கலாம் எனக் கருதுகின்றன.

இவ்விவகாரத்தில் நாடாளுமன்ற விவாதத்திற்கு ஒப்புக்கொண்டால், அது பாரதிய ஜனதாவிற்கே பாதகமாக அமையும் என அக்கட்சி கருதுவதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இதனிடையே, சுரங்க முறைகேடு தொடர்பாக நாடாளுமன்ற நடவடிக்கைகளை பாரதிய ஜனதா முடக்குவது சரியல்ல எனத் தெரிவித்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே நாடாளுமன்ற விவாதத்திற்கு பாரதிய ஜனதா எதிர்ப்புத் தெரிவிப்பதாக குற்றம்சாட்டியுள்ளது.

# தானே புயல் நிவாரண உதவிகளில் முறைகேடு நடந்திருப்பதாக விஜயகாந்த் குற்றச்சாட்டு



தமிழ்நாட்டில் கடந்த 2011ம் ஆண்டு டிசம்பர் மாதம் தானே புயல் கடலோர மாவட்டங்களை தாக்கி ஏராளமான சேதங்களை ஏற்படுத்தியது.

இப்புயலால் ஏற்பட்ட சேதங்களை சரிசெய்ய மத்திய, மாநில அரசுகள் வழங்கிய நிவாரண உதவிகளில் பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளதாக தேமுதிக தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்த் குற்றம்சாட்டியுள்ளார்.

இவ்விடயத்தை கடலூர் மாவட்டத்தில் நடந்த தேமுதிக பொதுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

தமது கட்சியைச் சேர்ந்தவர் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் சிவகொழுந்து கையெழுத்தை யாரோ ஒருவர் போட்டு நிவாரணம் பெற்றுள்ளதை ஆதாரத்துடன் குறிப்பிட்டார்.

தமிழகம் முழுவதும் விவசாயிகள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகி வருவதாகவும், குழந்தைகளின் பள்ளிக் கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் பெற்றோர் அவதிப்பட்டு வருவதாகவும் விஜயகாந்த் குற்றம்சாட்டினார்.

## திருமண மோசடி:

# கேரள அழகி சகானாவை பிடிக்க பொலிஸார் தீவிர முயற்சி



திருமணம் மற்றும் காதல் வலையில் இளைஞர்களை ஏமாற்றிய கேரள அழகி சகானாவை தேடி பிடிக்க பொலிஸார் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

சகானாவின் கணவன்மார்கள் வரிசையில் சித்திக், மணிகண்டன், பிரசன்னா, சரவணன் என பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

இவர்களில் மணிகண்டனும், பிரசன்னாவும், சகானாவுடன் திருமணத்தின் போது எடுத்துக் கொண்ட புகைப்படங்களை ஆதாரங்களாக கொடுத்துள்ளனர்.

சகானா 50 பேருக்கு மேல் ஏமாற்றியிருப்பதாக கூறப்பட்ட நிலையில், சென்னை பொலிஸ் கொமிஷனர் அலுவலகத்தில் இது வரை 5 பேர் மட்டுமே புகார் மனுக்களை அளித்துள்ளனர்.

இந்த புகார் மனுக்கள் அனைத்தும் அடையாறு உதவி கொமிஷனர் மோகன்ராஜுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அம்மனுக்களில் சகானாவின் செல்போன் எண்களை வைத்து பொலிஸார் துப்பு துலக்கி வருகிறார்கள்.

அவர் கடைசியாக பயன்படுத்திய 2 செல்போன் எண்கள் மட்டுமே தற்போது பொலிசுக்கு துருப்பு சீட்டாக உள்ளது.

இந்த செல்போன் எண்களை பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

ஆனால் சகானாவின் செல்போன்கள் எப்போதும் அனைத்தே (சுவிட்ச் ஆப்)வைக்கப்பட்டுள்ளதால் அவர் இருக்கும் இடத்தை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதே நேரத்தில் சகானா தமிழ்நாட்டுக்குள் இல்லை என்பதை மட்டும் பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் வரை சகானாவின் செல்போன் தொடர்பில் இருந்தபோது பொலிஸார் அதில் தொடர்பு கொண்டனர்.

அப்போது அவர் வெளி மாநிலத்தில் இருப்பது தெரியவந்ததை யடுத்து காதல் கணவர்களை வைத்து, சகானாவை கைது செய்ய பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

அதாவது சகானா புகார் கொடுத்த கணவர்கள் யாரிடமாவது மீண்டும் பேசுகிறாரா? என்பதை பொலிஸார் கண்காணித்து வருகிறார்கள்.

இந்த நடவடிக்கைகளின் எதிரொலியாக சகானா விரைவில் சிக்குவார் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

# இந்திய செய்திகள்

# ஒலிம்பிக் இந்திய நாயகர்களுக்கு வரி விலக்கு அளிக்க மத்திய அரசு முடிவு



லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற இந்திய வீரர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்த வருடம் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவிற்கு 6 பதக்கங்கள் கிடைத்தது.

துப்பாக்கி சுடும் வீரர் விஜய் குமார், மல்யுத்த வீரர் சுசில்குமார் ஆகியோர் வெள்ளிப்பதக்கம் பெற்றனர்.

இவர்கள் தவிர துப்பாக்கி சுடும் வீரர் ககன்நரங், பேட்மின்டன் வீராங்கனை சாய்னா நேவால், குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், மல்யுத்த வீரர் யோகேஸ்வர் தத் ஆகியோர் வெண்கல பதக்கங்கள் பெற்றனர்.

பதக்கம் வென்ற இந்திய வீரர், வீராங்கனைகள் பாராட்டு மழையிலும், பரிசு மழையிலும் தற்போது நனைந்து வருகின்றனர். ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றதன் மூலம் இந்த 6 பேரும் தற்போது கோடீசுவர்களாகி விட்டார்கள்.

பதக்கம் பெற்று நாட்டுக்கு பெருமை சேர்த்த அவர்களுக்கு மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் தனியார் அமைப்புகள் பரிசு தொகைகளை வாரி வாரி இறைத்து வருகின்றன.

கோடிக்கணக்கில் பரிசு தொகையை பெற்ற அவர்களுக்கு மேலும் பெருமை அளிக்கும் விதமாக வருமானவரி விலக்கு அளிக்கப் படுகிறது.

அவர்களுக்கு கிடைத்த வருமானத்தில் வருமானவரி விலக்கு அளிக்க மத்திய அரசு முடிவு செய்து இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.



நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு பிரச்சினை தொடர்பாக, டில்லியில், பிரதமர் வீட்டை முற்றுகையிடச் சென்ற, அரவிந்த் கெஜ்ரிவாலையும், அவரது ஆதரவாளர் களையும் அழைத்துச் செல்லும் பொலிசார்.

# தினமும் 12 குழந்தைகள் மாயமாகும் அவலம்

தலைநகர் புதுடெல்லியில் தினமும் சராசரியாக 12 குழந்தைகள் காணாமல் பேசுவதாக அலுவலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

14 வயதுக்குட்பட்ட இக்குழந்தைகள் பல்வேறு காரணங்களால் கடத்தப்படுகின்றனர். இவர்களில் அதிகமானோர் பெண் குழந்தைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு ஒகஸ்ட் 15ம் திகதி வரை 3,171 குழந்தைகள் மாயமாகியுள்ளனர்.

இவர்களில் 1,652 பேர் பெண் குழந்தைகள், 1,519 பேர் ஆண் குழந்தைகள் ஆவார்.

மாயமான இவர்களில் 985 பேரைத் தேடிக்கொண்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2009ம் ஆண்டு 5,946 குழந்தைகளும், 2010ம் ஆண்டு 5,091 குழந்தைகளும் திடீரென காணாமல் போயினர். பின்னர் கடந்த 2011ம் ஆண்டு 2,665 பெண் குழந்தைகள், 2,446 ஆண் குழந்தைகள் என மொத் தம் 5,111 பேர் காணாமல் போய் உள்ளனர்.

இதனால் 2011ல் சாரசரியாக தினமும் 14 குழந்தைகள் காணமால் போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய நபரான நித்தியானந்தாவை மலேசியா வர இந்து சங்கம் அனுமதி மறுப்பு

இந்தியாவில் பெரும் சர்ச்சைக் குரியவராக இருக்கும் நித்தியானந்தா மலேசியாவிலும் சர்ச்சைக் குரியவராகிவிட்டார்.

மலேசியாவுக்கு வெளிநாட்டிலிருந்து சமயத் தலைவர்களோ அல்லது கோயில்களில் பணிபுரிவரோ வரவேண்டுமானால் இங்குள்ள மலேசிய இந்து சங்கத்தின் அனுமதியை பெற்றாக வேண்டும். இந்நிலையில் நித்தியானந்தாவை மலேசியாவுக்கு வரவழைக்க அவரது அடிப்பொடி ஒருவர் மிகவும் பகீரத பிரயத்னப் பட்டிருக்கிறார்.

ஆனால் சர்ச்சைக் குரிய நபரான நித்தியானந்தா மலேசியா வர இந்து சங்கம் அனுமதி கொடுக்கவில்லை.

இதில் மூக்குடைபட்டுப் போன நித்தியானந்தா அடிப்பொடி, இந்து சங்கத்தின் தேசியத் தலைவர் மோகன் ஷாணுக்கு மிரட்டல் விடுத்திருக்கிறார்.

# உலக ருவென்ரி–20 போட்டியில் இலங்கைக்கு வாய்ப்பு அதிகம்



- மலிங்க

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரில் இலங்கை வீரர்கள் பெருமளவில் பங்குபற்றிவருவதன் காரணமாக ஏனைய நாடுகளை விட சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடரில் இலங்கை அணிக்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாக இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரும், ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் அணியான றுகுண ரோயல்ஸ் அணியின் தலைவருமான லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடருக்கு முன்னதாக ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் இடம்பெற்றது மிகச் சிறந்த தயார்ப்படுத்தலாக அமைந்ததாகத் தெரிவித்த லசித் மலிங்க, அனைத்து இலங்கை வீரர்களும் இலங்கையின் மைதானங்களின் நிலைவரங்கள் குறித்துத் தெளிவான அறிவைப் பெற்றுள்ளதாகவும், எனவே இலங்கை அணி உலக ருவென்ரி-20 தொடரில் வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரில் றுகுண அணிக்குத் தலைமை தாங்கிய லசித் மலிங்க, நேற்று அவ்வணி தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டதன் பின்பு இக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். வயம்ப அணிக்கெதிரான தோல்வியின் மூலமே றுகுண அணி இத் தொடரிலிருந்து வெளியேறியது.

அணியின் தோல்வி குறித்துக் கருத்துத் தெரிவித்த லசித் மலிங்க, அநேகமான உள்ளூர் வீரர்களுக்கு ருவென்ரி-20 தொடரொன்றில் பங்குபற்றுவது இதுதான் முதற்தடவை எனவும், அதன் காரணமாக ருவென்ரி-20 லீக்குகளுக்கு அவர்கள் இன்னமும் பழக்கப்பட்டிருக்கவில்லை எனவும் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

# இலங்கைக் கல்வி அமைச்சின் 2ஆம் கட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள்

இலங்கை கல்வி அமைச்சினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படுகின்ற பெரு விளையாட்டுப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளுக்கான இரண்டாம் கட்டப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இரண்டாம் கட்டப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் மாத்தளை எட்வேட் பாக் விளையாட்டு மைதானத்திலும் வேனாட் அலுவிகார் விளையாட்டு மைதானத்திலும் எதிர்வரும் 15ஆம் 16ஆம் 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வடமாகாண அணி சார்பில் ஆண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் கலந்துகொள்ளவுள்ளன. பெண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.

# ஒலிம்பிக் பதக்கம் வென்றவர்களுக்கு வருமான வரி விலக்கு

இந்திய அணி முதன் முறையாக வேறு எந்த ஒலிம்பிக்கிலும் இல்லாத அளவிற்கு லண்டன் ஒலிம்பிக்கில் 6 பதக்கம் வென்றது.

துப்பாக்கி சுடும் வீரர் விஜய் குமார், மல்யுத்த வீரர் சுஷில் குமார் ஆகியோர் வெள்ளிப்பதக்கம் பெற்றனர். துப்பாக்கி சுடும் வீரர் ககன்நரங், பேட்மின்டன் வீராங்கனை சாய்னா நேவால், குத்துச் சண்டை வீராங்கனை மேரிகோம், மல்யுத்த வீரர் யோகேஸ்வர் தத் ஆகியோர் வெண்கல பதக்கமும் பெற்றனர்.


மல்யுத்தில் வெள்ளி வென்ற சுஷில்குமார் கடந்த முறை வெண்கலம் வென்றுள்ளார். இதன்மூலம் இரண்டு ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்தியர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

பதக்கம் வென்ற இந்திய வீரர், வீராங்கனைகள் பாராட்டு மழையிலும், பரிசு மழையிலும் நனைந்தனர். பதக்கம் பெற்றதன் மூலம் இந்த 6 பேரும் தற்போது கோடீஸ்வரர்களாகி விட்டார்கள்.



கோடிக்கணக்கில் பரிசு தொகையை பெற்ற அவர்களுக்கு மேலும் பெருமை அளிக்கும் விதமாக அவர்களுக்கு கிடைத்த பரிசுத் தொகைளுக்கு வருமானவரி விலக்கு அளிக்க மத்திய அரசு முடிவு செய்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

# உலக சாம்பியன் வீரர்களுக்கு 20 இலட்சம் இந்திய ரூபா பரிசு!



ஆஸ்திரேலியாவை வீழ்த்தி 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இறுதியில் வெற்றி பெற்று உலக சாம்பியன்களான இந்திய ஜூனியர் அணியின் வீரர்கள் ஒவ் வொருவருக்கும் ரூ.20 லட்சம் பரிசு அறிவித்துள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை.

"கடந்த ஆண்டு உலகக் கோப்பையை மூத்த வீரர்கள் வென்றனர், இப்போது ஜூனியர் வீரர்கள் உலகக் கோப்பையை வென்றுள்ளனர். அணிக்கு வாழ்த்துக்கள்" என்று பி.சி.சி.ஐ. தனது செய்திக் குறிப்பில் கூறியுள்ளது.

இதனால் மகிழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்த பி.சி.சி.ஐ. இந்த நாள் இந்திய கிரிக்கெட்டிற்கு மிக முக்கியமான நாள் என்று தெரிவித்துள்ளது.

வீரர்களுக்கு ரூ.20 லட்சமும், மற்ற உதவியாளர்களுக்கு ரூ.15 லட்சமும் ரொக்கப்பரிசு அறிவித்துள்ளது பி.சி.சி.ஐ.

# பிறீமியர் லீக் கால்பந்து: ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்த செல்சி

பிறீமியர் லீக் கால்பந்து போட்டியில் நியூகாசில் அணியை அதிரடியாக வீழ்த்தி செல்சி அணி ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்தது. இங்கிலாந்தில் பிறீமியர் லீக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதன் லீக் போட்டியில் செல்சி, நியூகாசில் அணிகள் மோதின.

இதில் அபாரமாக ஆடிய செல்சி அணியின் ஈடன் ஹசார்டு தனது முதல் கோலை அடித்தார். ஈடன் கோல் அடித்த 22 வது நிமிடத்தில் செல்சியின் மற்றொரு வீரரான பெர்னான்டோ டோரஸ் அதிரடியாக மற்றொரு கோலை அடித்தார்.

இறுதிவரை நியூகாசில் அணி கோல் எதுவும் அடிக்கவில்லை இறுதியில் செல்சி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஏற்கனவே விகான், ரேடிங் அணிகளை வீழ்த்திய செல்சி அணி, தொடர்ந்து மூன்றாவது வெற்றியை பெற்று 9 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

மற்றொரு போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் புல்ஹாம் அணியை வீழ்த்தி முதல் வெற்றியை பெற்றது.

மற்ற போட்டிகளில் சுவான்சியா (3-0, எதிர்- வெஸ்ட் ஹாம்), எவர்டன் (3-1, எதிர்- ஆஸ்டன் வில்லா), விகான் (1-0, எதிர்- சவுத்தாம்டன்) அணிகள் வெற்றி பெற்றன.

நார்விச் - குயின்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ், டாட்டன்ஹாம் - வெஸ்ட் புரோம் அணிகள் மோதிய போட்டிகள் 1-1 என்ற கோல் கணக்கில் சமன் ஆனது.


# எஸ்.எல்.பி.எல்: நகினஹிர அணியை வீழ்த்தியது உத்துர

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கில் நகினஹிர நாகாஸ் அணிக்கெதிரான போட்டியில் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் உத்துர ருட்ராஸ் அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கையில் நடைபெற்று வரும் ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்) தொடரின் 19வது லீக் போட்டியில் நகினஹிர நாகாஸ், உத்துர ருட்ராஸ் அணிகள் மோதின.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உத்துர ருட்ராஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய உத்துர ருட்ராஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் உத்துர ருட்ராஸ் அணி சார்பாக சாமர கப்புகெதர 43 ஓட்டங்களும், ரொப் குயினி 24 ஓட்டங்களும், டிலோன் டு பிறீஸ் 19 ஓட்டங்களும் எடுத்தனர். பந்துவீச்சில் நகினஹிர நாகாஸ் அணி சார்பாக ஷமின்ட எரங்க 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



இதனையடுத்து 150 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நகினஹிர நாகாஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்கள் மட்டுமே பெற்று 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் நகினஹிர நாகாஸ் அணி சார்பாக கொலின் டீ கிரான்டொமே 43 ஓட்டங்களும், சுராஜ் ரந்தீவ் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களும், உதர ஜெயசுந்தர 22 ஓட்டங்களும் எடுத்தனர்.

பந்துவீச்சில் உத்துர ருட்ராஸ் அணி சார்பாக நவீட் உல் ஹசன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி போட்டியின் நாயகனாக தெரிவானார்.

# றுகுண அணிக்கெதிராக வயம்ப அணிக்கு வெற்றி

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி வெற்றி பெற்றுள்ளது. றுகுண ரோயல்ஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வயம்ப யுனைட்டட் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது விக்கெட்டுக்காக 7.3 ஓவர்களில் 66 ஓட்டங்கள் பகிரப்பட்டதோடு, அவ்வணி ஒரு கட்டத்தில் 17 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எனினும் கடைசி ஓவரில் 4 ஓட்டங்கள் மாத்திரம் பெறப்பட்டதோடு, இறுதி 3 ஓவர்களிலும் 21 ஓட்டங்கள் மாத்திரம் பெறப்பட்டன.

துடுப்பாட்டத்தில் வயம்ப யுனைட்டட் அணி சார்பாகச் சிறப்பாக ஆடிய டினேஷ் சந்திமால் 54 பந்துகளில் 75 ஓட்டங்களையும், தமிம் இக்பால் 24 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக டில்ருவான் பெரேரா 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், லசித் மலிங்க, வகாப் றியாஸ், ரமித் ரம்புக்வெல்ல, டானியல் ஹரிஸ், ஷாலிக்க கருணாரத்ன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

163 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய றுகுண ரோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியின் நாயகனாக வயம்ப யுனைட்டட் அணியின் டினேஷ் சந்திமால் தெரிவானார்.

# சரிவிலிருந்து மீளுவோம் ராஸ் டெய்லர் கூறுகிறார்

"தவறுகளை திருத்தி சரிவில் இருந்து மீளுவோம்" என்று நியூஸிலாந்து அணி கப்டன் ராஸ் டெய்லர் கூறியுள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட தோல்வி குறித்து அவர் கூறுகையில், எங்கள் திறமைக்கு தக்கப்படி நாங்கள் விளையாடவில்லை. இந்திய அணியின் பந்து வீச்சு மிகவும் தரமாக இருந்தது.

2010ஆம் ஆண்டில் நாங்கள் இங்கு வந்த போது பயிற்சி ஆட்டத்தில் விளையாடாமல் முதல் இரு டெஸ்டில் சமன் செய்தோம். பயிற்சி ஆட்டம் இல்லாததை தோல்விக்கு காரணமாக சொல்ல முடியாது.

நான் உள்பட துடுப்பாட்டக்காரர்கள் அனைவரும் அதிகமாக போராடி இருக்க வேண்டியது அவசியமானதாகும். அஸ்வி னுக்கு எதிராக எப்படி பேட்டிங் செய்ய வேண்டும் என்பதை நாங் கள் கற்றுக் கொள்ள வேண்டும். தவறுகளை திருத்தி சரிவில் இருந்து மீளுவோம் என்று ராஸ் டெய்லர் கூறினார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 28.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது